தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு உ௰௰உ	மலர்
௪௪	சாதாரண, மாசி – பங்குனி (1971 – பிப்ரவரி – மார்ச்)	௰க, ௰உ

இலக்கியச் சிந்தனைகள்

கட்டுரை—II

ஐங்குறு நூறு தொகை நூலா?

திரு. அ. தட்சிணாமூர்த்தி பி. ஏ. (ஆனர்சு) பி ஈடி.
தமிழ்த்துறை, திருபுட்பம் கல்லூரி, பூண்டி.)

எட்டுத் தொகை நூல்களில் ஒன்றாகத் திகழ்வது ஐங்குறு நூறென்னும் விழுமிய நூலாகும். மூன்றடிச் சிறுமையும் ஆறடிப் பெருமையும் கொண்ட 500 சிறு பாக்களின் தொகுப்பா யமையும் இந்நூலின் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை ஆகிய ஐந்து பகுதிகளையும் முறையே ஓரம் போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகிய சங்கச் சான்றோர் பாடினர் என்று கொள்கின்றனர். இந்நூலின் பாக்கள் சுருங்கச் சொல்லி விளங்கவைக்கின்றன. குறுந்தொகை, நற்றிணை, அகம் என்னும் நூல்களின் செறிவும், கருத்தாழமும், உள்ளுறை இறைச்சி உவமையழகுகளும் கொண்டு இவை கற்பாருள்ளத்தைக் கவர்கின்றன. ஏனைய தொகை நூற்கட்கில்லாத தனிப்பண்புகளும், புதிய சில வழக்காறுகளும் இந்நூல் ஏனைய மூன்றும் தொகுக்கப் பெற்ற பின்னர் -அவற்றில் திளைத்து மகிழ்ந்த பிற்காலச் சான்றோர் ஒருவரால் இயற்றப் பட்டிருக்கலாமோ என்ற ஐயத்தினைத் தூண்டுகின்றன. இதனை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

நூலின் அமைப்பும் வகுப்பும்:- இந்நூலின் ஐந்து திணைகளும் மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்றவாறு முறைப் படுத்தி வைக்கப் பெற்றுள்ளன. ஒவ்வொரு திணையும் 100 பாக்களைப் பெறுகின்றது. ஒவ்வொரு நூறும் பத்துப்

பாக்கள் அமைந்த பத்துப் பத்துக்களாகப் பிரிந்து அமைகிறது. பதிற்றுப்பத்தின் ஒவ்வொருபாவும் ஒவ்வொரு பெயரால் குறிக்கப்படுதல் போன்று ஒவ்வொரு பத்தும் ஒவ்வொரு பெயர் பெற்று நிற்கிறது. பாடலின் தொடக்கம், முடிவு, கருப்பொருள், உரிப்பொருள், கூற்றினைக் கூறுவார், கேட்பார் அடிப்படையில் இப்பெயர்கள் அமைகின்றன.

'வாழியாதன் வாழியவினி.'' ''எக்கர் ஞாழல்,'' ''வெள்ளாங்குருகின் பிள்ளை செத்தென,'' ''பெருங்கடற் கரையது சிறுகருங் காக்கை,'' ''அன்னாய் வாழி வேண்டன்னை,'' ''அன்னை வாழி வேண்டன்னை,'' '' குன்றக் குறவன் காதல் மடமகள்.'' ''அவரோ,'' ''நன்றே'' என்பனபோல் சில பத்துக்களின் பாடல்களைத்தும் ஒரே தொடக்கத்துடனமைகின்றன.

இருபது பாக்கள் ''அன்னாய்'' என்றும், நான்கு பாக்கள் "விரைந்தே" என்றும், வேறு நான்கு பாக்கள் 'வந்தமாறே'' என்றும் முடிகின்றன. 121 முதல் 128 முடிய ''வினவுவோளே.'' ''பாய்வோளே'' என்றவாறு பெண்பால் முடிவுடையன ஐந்து பாக்கள் 'பாசறையோரே,'' ''காடிறந்தோரே,'' '' உலமருவோரே '' என்ற முடிவுடையன ''பொழுதே,'' ''உடைத்தே,'' என்ற முடிவுகளை மூன்று பாக்கள் பெறுகின்றன.

திணைகட்குரிய பறவை, விலங்கு முதலிய கருப்பொருள்கள் தவறாது ஒவ்வொரு பத்திலுமுள்ள அனைத்துப் பாடல்களிலும் இடம் பெறுகின்றன. 'வெள்ளாங் குருகுப் பத்து'' மஞ்ஞைப் பத்து, குரக்குப்பத்து, கள்வன் பத்து, வேழப் பத்து ஆகியவை இத்தகையன.

அம்மவாழிப் பத்து, அன்னாய் வாழிப் பத்து தோழிக்குரைத்த பத்து, பாணற்குரைத்த பத்து, தாய்க்குரைத்த பத்து, கிழத்தி கூற்றுப் பத்து, தோழிவற்புறுத்த பத்து, பருவங்கண்டு கிழத்தியுரைத்த பத்து முதலானவை கூறுவோர் கேட்போர் அடிப்படையிலமைந்த பெயர்களாம். 'தொண்டிப் பத்து' என்பது பாடலில் தவறாது இடம் பெறும் நகரத்தின் பெயராலமைந்தது.

ஆராய்ச்சி :- சங்க காலத்தும் அதற்கு முன்னும் இயல், இசை, கூத்து, கட்டிடம், சிற்பம், ஓவியம், மருத்துவம் என்னும் பலகலைகளையும் பற்றிய இலக்கண நூல்கள் இருந்

துள்ளன. அதுபோன்றே தொல்காப்பியம் போன்ற இலக்கண நூல்கள் பல இருந்து அழிந்தன இவற்றில் தொல் காப்பியத்தைத் தவிர ஏனையவை அழிந்தன இவ்வாறு கலைகள் பற்றிய இலக்கணங்களே நூல்வடிவில் இயற்றப் பட்டனவென்றும் அகம், புறம்பற்றித் தனித் தனிச் சிறுபாக்களை யியற்றுவதையே இலக்கிய நெறியாகக் கொண்டிருந்தன ரென்றும் கருத இடமுண்டு சங்க காலத்தில் வாழ்ந்த ஐந்நூற்றுவர்க்கு மேற்பட்ட புலவர்கள் பாடிய தனித்தனிப் பாக்கள் நமக்குக் கிடைத்திருக்கையில் அவர்கள் பல பாக் களடங்கிய அகப்புற நூல்களை யியற்றியிருப்பின் கிடைத் திருக்குமென்பதில் ஐயமில்லை. அக்காலப் புலவர்கள் திணை வகுத்துக் கொண்டு ஒவ்வொன்றுக்கும் இத்துணைப் பாக்கள் பாடவேண்டும் என வரையறுத்துக் கொண்டு நூல் வடிவில் பாடினரல்லர். அக்காலத்தில் ஒரு தனிப்பாடலே ஒரு நூலாயிற் றென்பதைப் பத்துப்பாட்டிற் காணலாம். ஒரு புலவரே ஒரு திணையைப் பற்றிப் பல பாடல்களைப் பாடினாலும் ஒவ்வொரு பாடலும் தனித்தன்மையோடு விளங்கிற்று ஒரு பாடலில் வரும் கருப்பொருள் மற்றொன்றில் வருவதில்லை அவ்வாறே வந்தாலும் அதுவும் தனித்ததோர் அழகு பெற்று நிற்கும். கூறியது கூறல் என்பதைக் காண்டலரிது.

ஐங்குறுநூற்றில் இதற்குமாறான நிலையினைக் காணு கின்றோம். ஒரே தொடக்கம், ஒரே முடிவு என வரையறுத்துப் பாடப் பட்டுள்ளதும், ஒரே கருப்பொருள் எல்லாப் பாக்களிலும் இடம் பெறுதலும் பிறவும் கபிலர் முதலான சான்றோர் எண்ணிப் பாராதனவாகும். இங்கே காணப்படும் திணைப் பாகுபாடும், ஒவ்வொன்றும் பத்துக்களாகப் பிரிந்து நிற்பதும் புதுமையே. நெடுந்தொகையில் காணப்படும் திணை வகுப்பு தொகுத்தோர் செய்ததே. எனவே தனிப்பாடற் காலப் புலவர் களாம் கபிலர் உள்ளிட்ட சான்றோர்களை முற்றிலும் புதிய இலக்கியமாம் இந்நூலோடு இணைப்பதில் பொருத்த மிருப்ப தாய்த் தோன்றவில்லை. செயற்கை முறை அமைந்திருப்பதை இந்நூல் காட்டுகிறது எனலாம்.

ஒரே ஆசிரியர் ஒரு நூலுக்கு ஆசிரியராவதைப் பதினெண் கீழ்க்கணக்குக் காலத்தில் காணுகிறோம் என்றாலும் இந்நிலை இதற்குச் சற்றுமுன்பே தோன்றிவிட்ட தெனலாம். சிலம்பு திருக்குறளென்பன சங்க காலத்தின் இறுதியில் தோன்றினவெனக் கருதுவார் உளர். திருக்குறள் சிலம்புக்கு முந்திய தென்பது தெளிவு. ஐங்குறுநூறு பொருளாலும்,

யாப்பாலும் குறுந்தொகை முதலியவற்ருேடு ஒத்திருப்பதால் இது திருக்குறளுக்கு முந்தியதாகலாம். எனவே நூல் வடிவில் முதன் முதலில் தோன்றிய அகப்பொருள் இலக்கியம் ஐங்குறுநூறெனத் தோன்றும். பத்துப்பத்தாக பாடும் திருவள்ளுவர்க்கு இந்நூல் முன்னேடியாக அமைந்தது போலும்!

பழைய வெண்பா :- இந்நூலின் ஐந்து பகுதிகளையும் பாடியோர் பற்றி அறியச் சான்ருக அமைவன

"மருத மோரம் போகி நெய்தலம்மூவன்
கருதும் குறிஞ்சிக் கபிலன் — கருதிய
பாலை யோதலாந்தை பனிமுல்லை பேயனே
நூலையோ தைங்குறு நூறு"

என்னும் வெண்பாவும் இந்நூலின் ஒவ்வொரு பகுதியின் இறுதியிலும் அமைந்த குறிப்புமேயாகும். அடிக்குறிப்பு மேற்சொன்ன வெண்பாவைத் தழுவியமைந்த தாகலாம் இவ்வெண்பாவும், குறிப்பும் பிற்காலத்தனவாகலாம். இவ்வாறே கலித்தொகை யாசிரியர்களைப் பற்றிய வெண்பாவும் கருத்து வேற்றுமைக்கு இடந்தந்து நிற்பது அறிஞருலகு அறிந்த செய்தியே.

ஐவரா ஒருவரா! இந்நூலின் அமைப்பு இது ஒருவரால் பாடப்பட்டிருக்கலாம் என்ற கொள்கைக்கு இடம் தருகிறது. ஐந்து பகுதிப் பாடல்கட்குமிடையே காணப்படும் ஒற்றுமைகளே சிறந்த சான்றுகளாகவமையும் இன்றேல் ஐவர் ஒன்று கூடித் திட்டமிட்டு இன்னின்னவாறு தொடக்கமும் முடிவும் அமைத்தும், கருப்பொருள்களும் உரிப்பொருள்களும் இடம்பெறுமாறும் பாடவேண்டுமென முடிவு செய்து பாடினர் எனல் வேண்டும். இதுவே உண்மையாயின் அவர்கள் ஐவருமே இவற்றைச் சேர்த்து நூலாகத் தொகுத்து வைத்திருப்பர். தொகுப்பாசிரியரும், புரவலரும தேவையில்லை யன்ருே! புலத்துறை முற்றிய கூடலூர்கிழார் தொகுத்தார் என்பதற்கும் யானைக்கட் சேய் தொகுப்பித்தார் என்பதற்கும் இடமில்லாமற் போவது காண்க. சங்க காலத்தில் ஓராசிரியர் ஓரகப் பொருளிலக்கியத்தைப் படைக்கும் மரபோ, சிலர் ஒன்றுகூடித் திட்டமிட்டு ஒரு நூலை இயற்றும் மரபோ இருந்ததாகத் தெரியவில்லை. ஐந்நூறு புலவர்கட்கு மேல் வாழ்ந்த தமிழகத்தில் இவ்வைவர் மட்டும் ஒரு புது நெறியை மேற்கொண்டனர் என்பதும் பொருந்தாது.

தொகுத்தார் தொகுப்பித்தார் :- இந்நூலினிறுதியில், "இத் தொகை தொகுத்தார் புலத்துறை முற்றிய கூடலூர் கிழார், தொகுப்பித்தார் யானைக்கட் சேய் மாந்தரஞ்சேரலிரும் பொறையார்" என்ற குறிப்புள்ளது. இது மிகப் பிற்காலத்தர் குறிப்பென்பது நன்கு விளங்குகிறது, மன்னர்கள் பெயரைக் குறிக்கும்பொழுது "ஆர்" விகுதியிட்டெழுதுவது பழைய மரபன்று, இரும் பொறை. நல்லுருத்திரன், பன்னுடுதந்த மாறன் வழுதி எனக்குறிப்பதே முறை: இம்மரபை மாற்றி இரும்பொறையார் என்றெழுதுவதால் இது பிற்காலத்தார் குறிப்பு என்றுணரலாம், இந்நூல் சேர நாட்டுப் புலவரொருவரால் பாடப்பட்டது என்பதற்கு நூலின்கண் அகச்சான்றுண்டு. மருதத் திணைப் பகுதியின் முதல் பத்து முழுவதும் "வாழியாதன் வாழியவினி" எனச் சேரனை வாழ்த்துகிறது. தொண்டிப் பத்து என்றே ஒரு பத்து அமைந்துள்ளது இதனைக்கொண்டும் கூடலூர் கிழார் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறையைப் புறத்தில் பாடியிருப்பதாலும் அனுமானத்தால் மேற்கண்ட குறிப்பை யெழுதி யிருக்கவேண்டும். மேலும் 'ஆதன், அவினி என்போர் சங்க காலத்தில் தொண்டியிலாண்ட வேந்தர்களாக அறிய முடியவில்லை. இவ்வேந்தர்கள் சங்க காலத்திற்குப் பின்னுல் தொண்டியை யாண்ட சேரர்களாக விருக்கலாம். இந் நூலாசிரியர் இச்சேரர் காலத்தில் வாழ்ந்துள்ளார் என எண்ணத் தோன்றுகிறது. ஆசிரியர் பெயர் தெரியாமலிருந்த இந்நூலைக்கண்ட பிற்காலச்சான்றோர் ஒருவர் கபிலர், முதலிய புலவர்கள் குறிஞ்சி முதலிய திணைகளைச் சிறப்பித்துப் பாடுவதில் வல்லவராகையால் அவர்கள் பாடியிருக்கக் கூடும் என்று கருதி இக்கருத்தைப் பரப்பியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது

அகவற்பாவின் சிற்றெல்லை :- தொல்காப்பியனுர் அகவற்கு மூன்றடிச் சிற்றெல்லை வகுத்தார். எனினும் சங்க காலப் புலவர்கள் நான்கடிச் சிற்றெல்லையையே பின்பற்றியுள்ளனர். புறநானூற்றில் மூன்றடிகளில் அமைந்த பாடல் ஒன்றுகூட இல்லை. குறுந்தொகை முதலியவற்றைத் தொகுத்தோர் அடி வரையறையையே உளங்கொண்டனர். அவர்கட்குக் கிடைத்த பாக்களில் மிகச் சிறிய பாக்கள் நான்கடிகளையே பெற்றிருந்தன. எனவே குறுந்தொகையை முதலில் தொகுத் தனர். மூன்றடிகளில் அமைத்த பாக்கள் கிடைத்திருக்கு மாயின் அவற்றையே முதலில் தொகுத்திருப்பர், அத் தொகுதியே குறுந்தொகை யென்று பெயர் பெற்றிருக்கும்.

எனவே அக்காலத்தில் நான்கடிகளே சிற்றெல்லையாக அமைந்தமை விளங்கும், மேலும் 500 புலவர்கள் வாழ்ந்த கால எல்லையில் குறிப்பிட்ட ஐவர்மட்டும் 3 அடிகளைக் கொண்டு பாடினர் என்பதும் பொருந்தாது. மேலும் அகப்பாடல்களை மட்டுமே மூன்றடிகளில் பாடினர் என்பதும் ஏற்புடைத்தன்று. இந்நூலில் இத்தகைய சிறுபாக்கள் 53 உள்ளன.

நானூறும் ஐந்நூறும் :- குறுந்தொகை நற்றிணை, அகநானூறு என்னும் மூன்று நூல்களிலும் ஒவ்வொன்றும் 400 பாக்களைக் கொண்டுள்ளன. முதலிரண்டு நூல்களிலும் திணை வகுப்பில்லை. அகநானூற்றைத் தொகுத்தோர் திணைப் பாகுபாடு செய்தது மட்டுமின்றி, பாலை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய திணைகட்டு முறையே 200, 80. 40. 40, 40 பாடல்களை வகுத்தனர் ஒவ்வொரு தொகுதிக்கும் ஒவ்வொரு பெயரையும் அமைத்தனர். முன்னைய இரண்டையும் விட அகநானூறு திருந்திய வடிவம் பெற்றுலும் எல்லாத் திணை கட்கும் சமமாகப் பாடல்கள் அமையவில்லை. இதனை யுணர்ந்த இப்புலவர் எல்லாத் திணைகட்கும் சமமாகப் பாட வேண்டுமெனக் கருதி இவ்வாறு செய்துள்ளார் என்பது தெளிவாகிறது. திணைப் பாகுபாடமைந்திருந்தாலும் அவை நூல் முழுதும் சிதறுண்டு கிடக்கும் குறையை இப்புலவர் உணர்ந்து ஒவ்வொரு திணைக்குரிய பாடல்களையும் ஒன்ருக வைக்கும் நெறியை மேற்கொண்டார். அதுமட்டுமின்றி பதிற்றுப்பத்தில் நூறு பாடல்கள் பத்துப் பத்துக்களாக விளங்குவதைக் கண்ணுற்றுத் தம் நூலையும் பத்துப் பத்தாக வகுத்தமைத்தார் என்று முடிவு செய்யலாம்.

சங்க நூல்களும் ஐங்குறுநூறும் :- குறுந்தொகை முதலிய நூல் களில் வரும் மரபுத் தொடர்கள் பலவற்றை அப்படியே இவ்வாசிரியர் கையாள்கிருர். உள்ளுறை. இறைச்சி முதலியன வும், பழஞ் செய்யுட்களின் செறிவும் இதிலும் இடம்பெறும். தாம் விரும்பும் தலைவர்களின் பெயர்களை அகப்பாடல்களில் வைத்துப் பாடுதல் சங்க மரபு. அதுபோன்றே இவ்வாசிரியரும் ஆதன், அவினி, மத்தி, கடுமான் கிள்ளி, விராகன் முதலியோரைக் குறிப்பிட்டுள்ளார், கழாஅர் தொண்டி, முசிறி முதலிய பட்டினங்கள் அகப்பாடல்களில் இடம் பெறுவது போலவே இங்கே தொண்டி நகரம் இடம் பெறுகின்றது. இதுமட்டு மின்றி, ஏனைய தொகை நூல்களில் பயில வழங்கும் தொடர்களைக்

கூர்ந்து நோக்கி அவற்றையே தம் நூலுள் பல பாக்களில் கையாண்டுள்ளார். குறுந்தொகை முதலியவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் ஆளப்படும் தொடர்கள் மூன்று. அவை, "அன்னாய் வாழி வேண்டன்னை," "அம்ம வாழி தோழி" "உள்ளார் கொல்லோ தோழி" என்பனவாம். "அம்மவாழி தோழி" என்பது குறுந்தொகை. நற்றிணை, அகம் ஆகியவற்றில் முறையே 10, 4, 7 என்னும் விகிதத்தில் 21 இடங்களில் வரும். இதனை இவ்வாசிரியர் 45 பாடல்களில் வைத்தாள்கின்றார். "அன்னாய் வாழி வேண்டன்னை" என்பது அகத்தில் மட்டும் இரண்டிடங்களில் வருகிறது. இதனை இவ்வாசிரியர் அப்படியே மாற்றாமல் 11 இடங்களிலும் "அன்னை" என மாற்றி மேலும் 10 இடங்களிலும் கையாண்டுள்ளார். "உள்ளார் கொல்லோதோழி" என்பது ஏனையவற்றில் 5 இடங்களில் வந்திருந்தும் இவர் ஒரே பாட்டில் மட்டும் கையாண்டுள்ளார். இரண்டிடங்களில் வழங்கிய தொடரை 21 இடங்களில் கையாண்டவர், 5 இடங்களில் வழங்கியதை ஒரே இடத்தில் மட்டுமே கையாண்ட குறையை மிகப் பிற்காலத்தில் வாழ்ந்த ஒரு புலவர் கண்ணுற்றார். "உள்ளார் கொல்லோ தோழி" என்ற தொடக்கம் அமைந்த பாடல்கள் நான்கினை எழுதி, மூலச் சுவடியோடு சேர்க்க முயன்றுள்ளர். தென்காசிச் சுப்பையா பிள்ளையிடமிருந்து கிடைத்த சுவடியொன்றில் இருந்த 6 மிகைப் பாடல்களை ஐயர் தனியே நூலின் இறுதியில் அமைத்துள்ளார். பழைய காலத்தில் மிகுதியும் கையாளப்பட்ட தொடர்கள் இன்னவை யென்பதை இப்பாடல்களைத் தொகுதியாகக் கண்டு பயின்றவரே கண்டு பிடிக்க முடியும். எனவே இந்நூலாசியர் குறுந்தொகை முதலியன தொகுக்கப்பட்டு மக்களிடம் பரவிய காலத்தில் ஐங்குறு நூற்றைப் பாடியுள்ளார் என்பது தெரிகின்றது.

புதிய வழக்கு :- சங்க காலத்தில் இல்லாத சில புதிய வழக்காறுகளையும் இங்குக் காணலாம். இன்று நாம் 'குருவி' எனக் குறிப்பதைச் சங்க காலப் புலவர் பெருமக்கள் 'குரீஇ' என்றே வழங்கியுள்ளனர். நற்றிணை, குறுந்தொகை, நெடுந்தொகை, புறம், பத்துப்பாட்டு ஆகியவற்றில் பல விடங்களில் 'குரீஇ' பேசப் படுகின்றது. இந்நூல்களுள் ஓரிடத்திலேனும் 'குருவி' என்ற வழக்காறு காணப்படவில்லை. சங்க காலத்தில் இவ்வாறு இருந்த சொற்களெல்லாம் பிற்காலத்தில் யகர வகர மெய்கள் சேர்ந்து உயிர்மெய்யீறுகளாக மாறியமைந்தன. புகு, தொகு, உடு, முதலிய உகரத்தில் முடியும் குறிலிணை ஓரசை ஏவல் வினைச் சொற்களை வினையெச்சமாக்க—புகீஇ, தொகீஇ, உடீஇ

என்று வழங்கினர். அதுபோன்று அளை, வளை என்பனபோன்ற ஐகாரத்தில் முடியும் குறில் நெடில் ஓரசைச் சொற்களையும் அளைஇ, வளைஇ என்று வழங்கினர். இச்சொற்களெல்லாம் பிற்காலத்தில் புகுந்து, தொக்கு. உடுத்து, அளைந்து, வளைந்து என மாறியமைந்தன. இது போன்றே குரீஇ என்னும் சொல் பிற்காலத்தில் குருவி என்று மாறியமைந்தது.

[குரு + இ —> குரீஇ —> குருவி ;
தழு + இ —> தழீஇ —> தழுவி ;
கெழு + இ —> கெழீஇ —> கெழுவி —> கெழுமி.]

ஐங்குறு நூற்றின் 295 ஆம் பாடலில் "இருவியிருந்த குருவிவருந்துற" என்று காணப்படுகின்றது. இது மேற்கண்ட மாற்றத்தின் தொடக்க நிலையைக் குறிப்பதாகலாம்.

அகப்பாடல்களில் பறவை விலங்குகளின் அன்பு வாழ்க்கை பல விடங்களில் பேசப் படுகின்றது. கடுவன் இறந்தபின் உயிர்வாழ விரும்பாத மந்தி, கல்லாவன்பறழைக் கிளையுடன் சேர்த்திவரை பாய்ந்து உயிர் செகுத்தலைக் குறுந்தொகைப் பாடலொன்று குறிப்பிடுகிறது. துடியடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப் பிடியூட்டிப் பின்னுண்ணும் களிற்றையும், இன்னிழலின்மையின் வருந்திய மடப்பிணைக்குத் தன்னிழலைக் கொடுத்தளிக்கும் கலையையும் கலித்தொகையிற் காணுகின்றோம். மனிதரிடையே காணப்படும் அன்பு வாழ்க்கையையும், மனிதரிடையே மட்டும் காணப்படும் கைம்மை வெறுப்பையும் அஃறிணையுயிர்களிடத்தும் காட்ட விரும்பினர் புலவர். எனினும் மனிதரிடையே வழங்கும் தம்பி, அண்ணன், கணவன், காதலன் என்னும் உறவுப் பெயர்களை அஃறிணையுயிர்கட்கு வழங்குவதில்லை. ஐங்குறு நூற்றின் 274, 275, 276 ஆகிய பாடல்களில் மந்திக் கணவன் கல்லாக் கடுவன், குரங்கின் தலைவன் குரு மயிர்க் கடுவன், மந்திக் கணவன் முறிமேய் கடுவன், என்னும் வழக்காறுகளைக் காணுகின்றோம். இவை கபிலரின் பாடல்களாகக் கருதப்படுகின்றன. இவ்வழக்காறுகள் பிற்பட்டனவாகவே தோன்றும்.

மேலே காட்டிய ஏதுக்களால் ஐங்குறு நூறு ஏனைய அகப்பாடல்கள் தொகுக்கப் பெற்ற பின்னர் அவற்றை நன்கு கற்ற சான்றோர் ஒருவரால் பாடப்பட்டிருக்கக் கூடுமென்பதும், கபிலர் உள்ளிட்ட ஐவரும் இந்நூலைப் பாடினர் என்று கூறுவது பொருந்தாதென்பதும், எனவே இதனைத் தொகுப்பு நூலென்று கொள்ள இடமில்லை என்பதும் இதனால் புலத்துறை முற்றிய

[335-ஆம் பக்கம் பார்க்க]

ஆய்தத்தின் வரலாறு

திரு. இரா. கோதண்டராமன். எம். ஏ. (தமிழ்), எம், ஏ. (மொழியியல்)
அண்ணுமலைப் பல்கலைக் கழகம்.

புணர்ச்சியின்கண் ஓரே சூழ் நிலை (environment) யில் நிகழும் லகரம் அஃறிணை (அல்+திணை). நற்றிணை (நல்+திணை) ஆகிய புணர் மொழிகளில் முரண்பட்ட நிலையில் முறையே ஆய்தமாகவும், றகரமாகவும் மயங்கி அமைகின்றது. அஃறிணை ★ அற்றிணை யாகவும், நற்றிணை ★ நஃறிணை யாகவும், மாறி மயங்கவில்லை இங்ஙனம் மயங்காமைக்குந் தகுந்த ஒலியியல் காரணங்கள் இருக்கவேண்டும். மெய்யொலிகளாகிய (Laterals) லகர ளகரங்கள் வல்லொற்றுக்களின் முன், சிறப்பாகத் தகரத்தின் முன் ஆய்தமாக மயங்குவதற்கான ஒலியியல் காரணங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

புள்ளி மயங்கியலில் மருங்கொலிகளின் மயக்கத்தைக் கூறும்போது அவை தகரத்தின் முன்னர் நிகழுங்கால் ஆய்தமாகவும் மயங்கப்பெறும் எனக் குறிக்கிளுர் தொல்காப்பியர்.

1. தகரம் வரும்வழி ஆய்தம் நிலையலும்
புகரின் றென்மனுர் புலமை யோரே
(தொல் எழுத்து (இளம்) 370)

2- ஆய்த நிலையலும் வரை நிலை யின்றே
தகரம் வரூஉங் காலை யான (ஷ 400)

[334-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி]
கூடலூர் கிழார் தொகுக்கவும் யானைக்கட்சேய் தொகுப்பிக்கவும் இடமேற்படவில்லை யென்பதும் தெளிவாதல் காண்க. இவ்வாறு கொள்ளுவதால் இந்நூலின் பெருமை எவ்வாற்ருனும் குறைவதில்லை. பெரும் புலவர்கள் பெயரில் வழங்குமாயின் மக்களாற் போற்றப்படுமென்ற எண்ணமே கபிலர் முதலியோர் இயற்றினர் என்று கொள்ளுவதற்கு அடிப்படையாக வேண்டும். பிற்காலத்தில் கம்பர், ஔவையார், திருவள்ளுவர் முதலியோர் பெயரில் பல தனிப்பாடல்களும், சிறு நூல்களும் தோன்றியதை அறிந்த நாம் இதனையும் அவ்வாறு கொள்வதில் தவறில்லை யெனலாம். இக்கருத்துக்கள் மேலும் ஆயத்தக்கனவாம்.

முதல் நூற்பா நிலைமொழியீற்று லகரமும், இரண்டாம் நூற்பா நிலைமொழியீற்று ளகரமும் தகரத்தின் முன் ஆய்தமாக மயங்குவதைக் குறிக்கின்றன. **புகரின்றென்மனார் புலமையோரே, ஆய்தம் நிலையலும் வரைநிலை யின்றே** என்ற தொடர்களை முனைந்து நோக்கும் போது, தொல்காப்பியம் தோன்றிய காலத்தில் மருங்கொலிகள் ஆய்தமாக மயங்கும் நிலை வழக்கற்றுப் போயிற்று என்றும், பழைய மரபினைப் போற்றிக் காக்கவே இந்நூற்பாக்களையும், ஆய்தம் பற்றிய பிற நூற்பாக்களையும் தொல்காப்பியர் யாத்தார் என்றும் கருதத் தோன்றுகின்றது.

சுட்டு முதலாகிய அவ், இவ், உவ் ஆகியவற்றின் ஈற்றில் நிற்கும் வகரம் வல்லொற்றின் முன் ஆய்தமாக மயங்கும் என்பதை

3. வேற்றுமை அல்வழி ஆய்த மாகும் (டி 380)

என புள்ளி மயங்கியலிலும், தனி மொழிகள் மற்றும் புணர் மொழிகளில் ஆய்தம் தோன்றுமாற்றை

4. குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி
உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே (டி 38)

5. ஈறியல் மருங்கினும் இசைமை தோன்றும் (டி 39)

என்பதை மொழி மரபிலும் கூறிச் செல்கிறார் தொல்காப்பியர்.

இங்ஙனம் பல நூற்பாக்களில், தனி மொழிகளில் ஆய்தம் தோன்றுமாற்றையும், மருங்கொலிக்கும் வகரமும் ஆய்தமாக மயங்குமாற்றையும் குறித்துச் செல்லும் தொல்காப்பியர், ஆய்தத்தினைச் சார்பெழுத்துக்களுள் ஒன்றாகக் குறிப்பதுடன் அமைந்து விடுகிறார். ஆய்தம் தோன்றுவதற்கான தகுந்த ஒலியியல் காரணங்களையும், ஆய்தத்தின் ஒலியமைப்பையும் அவர் குறிக்கவில்லை. பின்னர் தோன்றிய இலக்கண ஆசிரியர்களும் ஆய்தத்தினை ஒலியியல் அடிப்படையில் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. ஆனால் இந்த நூற்றாண்டில் தமிழ் அறிஞர்களும், மேலை நாட்டு அறிஞர்களும் ஆய்தத்தின் இயல்பையும் தோற்றத்தையும் குறித்துப் பல கோணங்களில் ஆராய்ந்து தம் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

பேராசிரியர் தெ. பொ. மீ. ஆய்தத்தினை இரட்டித்த வல்லொற்றுக்களின் சார்பொலி (allophone) யாகக் கொண்டு,

அதை நெடில் உரசொலி (long fricative) மதிப்பிடுகிறார்.[1] ஆய்தத்தினை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் க்யூப்பர் ஆய்தம் தொன்மொழியில் ஓர் ஒலியன் (Phoneme) நிலையில் இருந்தது என்றும், பழந்தமிழில் அதன் தெளிவான ஒலியமைப்பைத் திட்டவட்டமாகக் குறிப்பதற்கில்லை என்றும் எழுதிச் செல்கிறார்.[2] ஆய்தம் பற்றிய திரு. ஆர். இராதகிருட்டிணன் அவர்களின் முடிவு மற்றவர்களின் கருத்துக்களினின்றும் பெரிதும் மாறுபடுகின்றது. நிலைமொழியீற்றில் நின்ற னகர ணகரங்கள் ஆய்தமாகக் காலப் போக்கில் திரிந்து அமைந்தனவாதல் வேண்டும் எனக் கருதுகிறார் இராதாகிருட்டிணன்.[3] பேராசிரியர் பி எசு. சுப்ரமணிய சாத்திரி அவர்கள் ஆய்தம வல்லொற்றுக்களின் முன் நிகழும் போது அவற்றின் சாயலுடன் ஆறு வகைகளில் ஒலிக்கப் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கொள்கிறார்.[4] ஆய்தம் குறித்து தேவநேயன் மற்றும் பேராசிரியர்கள் எல். வி ராமசாமி ஐயர், வி. ஐ. சுப்ரமணியம், சி. ஆர். சங்கரன், பிஎச் கிருட்டினமூர்த்தி முதலிய பலரும் ஆராய்ந்திருக்கின்றனர் விரிவஞ்சி அவர் தம் கருத்துக்கள் இங்கு விடப்பட்டிருக்கின்றன.

நிலைமொழியீற்றில் நிகழும் மெய்களும், புணர்ச்சியின்கண் மயங்கும்போது, அம் மயக்கம் மொழியின் ஒலியியல் அமைப்புக்கு இசைவாகவும், முறையான விளக்கத்துக்கு உட்பட்டதாகவும் அமைகின்றது. தமிழின் ஒலியியல் அமைப்பையும், மெய்கள் புணர்ச்சியின்கண் மயங்கும் பான்மையையும் கூர்ந்து நோக்கும் போது எந்த மெய்யொலியும் ஆய்தமாக மயங்குதற்குரிய ஒலித் தன்மையைப் பெற்றிருப்பதாகத் தோன்றவில்லை. ஆய்தத்தைக்

---

1. A History of the Tamil Language. (பக்கம் 68—73)

2. Two problems of old Tamil Phonology — F. B. J. Kuiper. Indo Iranian Journal (பக்கம் 191—205) Vol. II. 1958.

3 Aytam. Its origin and nature. Proceedings of the First International conference seminar of Tamil studies. (பக்கம் 626) Vol. II.

4. Comparative Grammar of the Tamil Language (பக்கம் 52) 1947.

குறித்து ஆராய்ந்த பலரும் இவ் அடிப்படை ஒலியியல் உண்மையைக் கருத்தில் கொண்டதாகவும் தெரியவில்லை. மெய்கள் மயங்கும்போது நாவின் இயக்கம் மட்டுமின்றி, ஒலித்தன்மையும் ஒருங்கிணைந்து செயல்படுகின்றது. ஆய்தத்தின் நிலை அறிந்து கொள்வதற்கு முன் ஒலித்தன்மை குறித்து ஓரளவு அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும்.

ஒலித்தன்மை ; ஒலிகள் தன்மையில் மாறுபடுவதற்கு, குரல்வளையில் அமைந்துள்ள இரண்டு குரல் மடல்கள் (Vocal lips) காரணமாக அமைகின்றன. மொழியில் பயிலும் ஒலிகள் இக் குரல் மடல்களின் இயக்கத்திற்கேற்ப தன்மையில் மாறுபடுகின்றன. காற்று குரல்வளை வழியாக வெளிப்படும்போது குரல் மடல்கள் அலைந்தும், அலையாமலும் இருநிலைகளில் செயல்படுகின்றன. குரல் மடல்கள் காற்றின் போக்கில் அலையும்போது ஒலிகள் 'குரல்' தன்மையைப் பெறுகின்றன. இத்தகைய ஒலிகள் **அலைமடல் ஒலிகள்** அல்லது **அலையொலிகள்** (Voiced sound's) என வழங்கப் பெறும். குரல் மடல்கள் காற்றின் போக்கில் அலையாமல் ஒரு நிலையில் இருந்தால் அப்போது தோன்றும் ஒலிகள் 'குரல்' இழந்து நிற்கின்றன. இத்தகைய ஒலிகள் **நிலைமடல் ஒலிகள்** அல்லது **நிலையொலிகள்** (Voiceless sounds) எனக் குறிக்கப்பெறும். ஒலிகளின் நிலையொலித் தன்மை (Voiceless property)யை : இக்குறியீட்டைப் பெய்வதன் மூலம் இக்கட்டுரையில் உணர்த்தப்படும்- எ—டு. அல் : + திணை.

தமிழில் வழங்கும் வல்லொலிகள் ஆறும் நிலையொலிகளாகும். உயிரொலிகள் உட்பட ஏனைய மெய்யொலிகள் அனைத்தும் அலையொலிகளின் பாற்படும் குரல் வளையினின்றும் அலையொலிகளாகவும் நிலையொலிகளாகவும் வெளிப்படும் ஒலிகள் வாய்ப்பகுதியில் நிகழும் காற்றின் அழுத்தத்திற்கேற்ப மேலும் சில இயல்புகளைப் பெறுகின்றன. வாய்ப்பகுதியில் ஒலிகள் பெறும் இயல்புகளை ஒட்டியே தொல்காப்பியர் மெய்யொலிகளைப் பாகுபடுத்திச் செல்கிறார். குரல் வளையில் ஒலிகள் மாறுபடும் தன்மையைக் குறித்து அவர் ஏதும் குறிக்கவில்லை. குரல் வளையில் ஒலிகள் மாறுபாடும் பான்மையையே இக்கட்டுரையில் ஒலித்தன்மை எனக் குறிக்கப்படுகிறது. ஆய்தத்தை ஆராய இவ் ஒலித்தன்மையையே இங்கு பின்புலமாகக் கொள்ளப் படுகிறது

ஒரே சூழ் நிலையில் மருங்கொலிகள் ஆய்தமாகவும், வல்லொலிகளாகவும் மயங்கும் பான்மை அவை ஒலித்தன்மையில் மாறுபட்டு இயல்கின்றன, என்ற உண்மையையே உணர்த்துகின்றன. அதாவது ஆய்தமாக மயங்கும்போதும், வல்லொலிகளாக மயங்கும்போதும் மருங்கொலிகள் நிலையொலி மற்றும் அலையொலி ஆகிய இருவேறு ஒலித்தன்மைகளைப் புலப்படுத்தி நிற்பனவாகக் கருதலாம். ஆனால் இவ் இருவகை ஒலித்தன்மைகளுடன் கூடிய மருங்கொலிகள் தமிழில் காணப்படவில்லை. எனவே நிலையொலி, அலையொலித் தன்மைகளுடன் ஒலிக்கப் பெற்ற மருங்கொலிகள் தமிழ் ஒலியியலுக்கு முற்பட்ட ஓர் ஒலியியலில் பயின்று வழங்கின எனக்கொள்ளலாம். இது உண்மையாயின் இவ் ஒலியியலை வழக்கில் கொண்டிருந்த மொழியாதாயிருக்கும் என்ற வினா எழலாம். இதற்குரிய விடையை ஒப்பியல் மட்டத்தில்தான் காணமுடியும்.

நீலகிரியில் வழங்கும் தொதுவ மொழியில் மருங்கொலிகள் அலையொலிகளாகவும், நிலையொலிகளாகவும ஒலிக்கப்பெறுகின்றன. [1] இதை ஒப்பியல் சான்றாக (Comparative evidence) க் கொண்டு ஆய்தத்தின் தோற்றத்தையும், தன்மையையும் விளக்கலாம். தொதுவமொழியில் மருங்கொலிகள் நிலையொலிகளாகவும் ஒலிக்கப் பெறுவதைக்கொண்டு, தமிழில் ஆய்தத்துடன் வழங்கும் சொற்கள் தொதுவ மொழியைச் சார்ந்தவை எனக் கருதமுடியாது. மாறாக, தமிழையும் தொதுவததையும் தோற்றுவித்த ஒரு மூலமொழியில் மருங்கொலிகள் நிலையொலிகளாகவும் ஒலிக்கப்பெற்றன எனவும், அம்மூல மொழியில் ஆய்தம் புணர்மொழிகளில் தோற்றம் கொண்டது எனவும கருதலாம் இம்மூலமொழியைத் தமிழ்—தொதுவ மூலமொழி (Proto Tamil - Toda) எனக் கொள்ளலாம். தமிழ் - தொதுவ மூலமொழியில் மருங்கொலிகள் தகரத்தின் முன்னர் அலையொலிகளாக நின்று வல்லொற்றுக்களாகவும், நிலையொலிகளாக நின்று ஆய்தமாகவும் மயங்கினவாதல் வேண்டும். இம்மூலமொழியினின்றும் தமிழ் தனி மொழியாகக் கிளைத்தபோது அலை மருங்கொலி (Voiced laterals) களை மட்டுமே ஏற்றுக் கொண்டது எனவும், இதன் விளைவாகத் தமிழ் ஒலியியலில் மருங்கொலிகள் வல்லொற்றின் முன் ஆய்தமாக மயங்குவதற்கு வாய்ப்பில்லாமல் போயிற்று எனவும், தமிழில் ஆய்தம் விளங்கும் சொற்கள் தமிழ் — தொதுவ

1. A Dravidian Etymologibal Dictionary. T. Burrow & M. B. Emeaneau.

மூலமொழியைச் சார்ந்தவை எனவும் கொள்வது பொருத்த மாகத் தோன்றுகிறது. இவ்விளக்கத்தைப் பற்றுக்கோடாகக் கொண்டு அஃறிணை பஃறுளி முதலிய சொற்களை முறையே ★ அல்: + திணை, ★ பல்: + துளி எனவும், நற்றிணை, கற்றூண் முதலிய சொற்களை நல் + திணை. கல் + தூண் எனவும், முஃடீது என உரையாசிரியர்களால் குறிக்கப் பெறும் சொல்லை ★ முள்: + தீது எனவும் ஆராயலாம்.

தனிமொழியில் ஆய்தம்: தமிழ் — தொதுவ மூலமொழியில் மருங்கொலிகள் தகரத்தின் முன்னர் நிலையொலிகளாக நின்று ஆய்தமாயின என்றால், தகரம் மயங்காமலே வழங்கும் தனி மொழிகளில் உள்ள ஆய்தம் எங்ஙனம் தோன்றியிருக்கக்கூடும்? தனிமொழிகள் எனக் கருதப் பெறுவனவற்றுள் ஆய்தம் அமைந் திருப்பதொன்றே அவை தனி மொழிகள் அல்ல என்பதை வலியுறுத்தும். தனிமொழிகளின் ஈறு உகர டகரங்களாக இருந்தால், அம்மொழிகளில் நிலையொலித்தன்மை பெற்ற மருங்கொலிகள் ஆய்தமாக மயங்கின எனக்கொள்ளலாம். ஆனால் அஃது, இஃது, அஃகு, வெஃகு முதலிய சொற்களில் ஈற்று மெய் றகர டகரங்களாகத் திரியாமையால் இவற்றைத் தாங்கி நிற்கும் வேர்ச் சொற்களின் ஈற்றுமெய்கள் மருங்கொலிகளாக அமைவதற்கு வாய்ப்பில்லை. அங்ஙனமாயின் அவ்வேர்ச் சொற்களின் ஈற்று மெய் யாதாயிருக்கக் கூடும்?

தொல்காப்பியர் சுட்டுமுதல் வகர ஈறு ஆய்தமாக மயங்கும் எனக்குறிப்பதால் அவ்-, இவ்-, உவ்-, மூன்றும், முறையே அஃ-, இஃ-, உஃ- என அமையும். இச்சுட்டுக்களின் ஈற்றில் வகரம் நிகழ்ந்தாலும் அதைச்சுட்டின் ஒன்றிய உறுப்பாக (Integral part)க் கொள்ளத் தகுமா என்பது ஐயத்திற்குரியதாக இருக்கின்றது. உடம்படு மெய்யாகத் தோன்றி, பின்னர் பிறழ் பிரிப்பின் (Wrong Segmentation) விளைவாக வகரம் சொற்களின் ஒன்றிய உறுப்பாக அமைவதற்கும் வாய்ப்பிருக்கின்றது எனவே அஃது, இஃது ஆகிய சுட்டுப்பெயர்களை ஆராயும்போது அவற்றின் வேர்ச் சொற்களின் ஈற்றுமெய்யை வகரம் எனத் திட்டவட்டமாகக் கொள்வதற்கில்லை. மாறாக, ஈற்றுமெய்யை யகரமாகக் கொள்வதற்கு ஒப்பியல் மற்றும் வரலாற்றுச் சான்றுகள் துணைபுரிகின்றன. நீலகிரியில் வழங்கும் குறும்ப மொழியில் அயி (< அய்—இ), இயி (< இய்—இ) முறையே அது, இது என்னும் சுட்டுப் பெயர்ப் பொருண்மையை உணர்த்தி

நிற்கின்றன.[1] வேள்விக்குடிப் பட்டயத்தில் இஃநெமுநி என்பதற்கு மாருக இய்நெமுநி என ஆய்தம் நிற்க வேண்டிய இடத்தில் யகரம் நிகழ்வதைப் பேராசிரியர் சி. ஆர். சங்கரன் குறிப்பிடுகிருர்.[2] கல்வெட்டுக்களில் ஆய்தத்துக்கு நிகராக யகரம் நிற்கும் பான்மையையும், இலக்கியங்களில் யகரம் ஆய்தத்துக்கு எதுகையாக அமையும் போக்கினையும் பேராசிரியர் தெ- பொ மீ. எடுத்துக் காட்டுகிருர்.[3]

மேற்குறித்த சான்றுகள் யகரம் ஆய்தமாக மயங்குவதற்கான வாய்ப்புக்களைத் தெளிவுபடுத்துவனவாக இருக்கின்றன. தொதுவ மொழியில் யகரம் இரண்டு சார்பொலிகளை (allophones)ப் பெற்றிருக்கின்றன. [1] அவற்றுள் ஒன்று அலையொலியாகவும் பிறிதொன்று நிலையொலியாகவும் ஒலிக்கப்பெறுகின்றது. மேற்குறித்த சான்றுகளுடன் இவ் உண்மையையும் கருத்தில் கொண்டு, ஆய்தம் விளங்கும் தனி மொழிகளைத் தாங்கி நிற்கும் வேர்ச் சொற்களின் ஈற்றுமெய்யை நிலையொழித் தன்மை நிரம்பிய யகரமாகக் கருதலாம் இவற்றைப் பின்புலமாகக் கொண்டு பழந்தமிழில் வழங்கும் ஆய்தம் பயிலும் சில தனி மொழிகளைக் கீழ வருமாறு ஆராயலாம்,

அஃது < ★ அய் : + து
இஃது < ★ இய் : + து
ஓஃகு < ★ ஓய் : + கு (ஓய் / ஓய் 'சுருங்குதல்'
அஃகு < ★ அய் : + கு (அய் / ஆய் 'குறைதல் மெலிதல்'

---

1. Field Notes on Kurumba Language colleeted by Mr. C. Thyagarajan, Department of Linguistics, Annamalai University-
2. A Historical study of ca: rpeluttu in Tamil Grammars and their commentaries—C. R. Sankaran & Rm. Sundaram. (Umesha Mishra Commemoration Volume. Page 561)
3. A History of Tamil Language Page 138.

---

1. Field Notes on Toda Language Collected by Mr S. Sakthivel Department of Linguistics, Annamalai University.
2. A History of Tamil Language. (பக்கம் 70)

வெஃகு < ★ வெய் : + கு (வெய் / வேய் 'விரும்புதல், கவர்தல்')

எஃகு < ★ எய் : + கு (எய் / ஏய் 'எரிதல்' எஃகு / எஃகம் 'வேல்')

பஃது < ★ பய் : + து (பய் 'பத்து' தெலுங்கில் பத்தை முதலாகக் கொண்டு பத்துப் பத்தாக எண்ணப்படும் எண்களில் Pay / bay ஈற்றில் நின்று பத்தின் பொருண்மையைக் குறிக்கின்றது. தமிழிலும்பத்தாம்வாய்பாட்டின்கண் பத்து, பைந்து (< ★ பய்த்து) என அமைந்து ★ பய் — என்னும் பகுதியைக் கொண்டிருத்தல் நோக்கற்பாலது)

ஆய்தம் தோன்றும் எல்லாத் தனிமொழிகளின் வேர்ச்சொற்களும் மருங்கொலிகளையோ அல்லது யகரத்தையோ மட்டுமே ஈற்று மெய்களாகக் கொண்டியல்கின்றன என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட முடியாது. எடுத்துக்காட்டாகக் கஃசு, கஃபு ஆகிய தனி மொழிகளின் வேர்ச் சொற்களில் உள்ள ஈற்று மெய்யை வரையறுத்துக் கூற முடியவில்லை, இவற்றின் உறவுச் சொற்களும் (Cognates) காணக் கிடைக்கவில்லை. கவ்— என்பதை இவற்றின் வேர்ச் சொல்லாகக் கருதுகிறார் தெ. பொ. மீ. [2] இது உண்மையாயின் கவ்— என்பதில் உள்ள வகரத்தை நிலையொலித்தன்மை யுடையதாகக் கருதி, கஃசு, கஃபு ஆகியவற்றை ★ கவ் : — சு, ★ கவ் : — பு என ஆராயலாம்.

ஆய்தத்தின் ஒலித்தன்மை: நிலையொலித்தன்மை நிறைந்த மருங்கொலிகளும், யகரமும் வல்லொற்றின் முன் ஆய்தமாக மயங்கும் எனக் கண்டோம் அங்ஙனமாயின் ஆய்தம் எங்ஙனம் ஒலிக்கப் பெற்றிருத்தல் கூடும்? ஆய்தம் என்ற சொல் நலிவுப் பொருண்மையைக் குறிப்பதாகும். எனவே ஒலியின் நலிந்த தன்மையை ஆய்தமாகக் கொள்ளலாம், அலையொலித்தன்மையுள்ள ஒலிகள் நிலையொலித்தன்மையுள்ளனவாக நலிய நேருங்கால் அவ்வொலிகள் ஆய்தத்தின் தன்மையுடையனவாகக் கருதப் பெறும். ஆகையால் நிலையொலிமெய்களின் ஒலியே ஆய்தத்தின் ஒலியாகும் எனத் துணியலாம். இந்நிலையொலிகளைத் தனிக்குறியீடுகளின் வாயிலாக உணர்த்த தகுந்த ஒலியியல்

[344 ஆம் பக்கம் பார்க்க]

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

திருக்குறட் கருவூலம்

(நக்கீரன் வழியடிமை வித்துவான். பி. மா. சோமசுந்தர முதலியார்,
இராணிப்பேட்டை.)

ஆ) நாயனர்

புலமிக்காருள் பெரிதும் மேம்பட்டு நின்ற தலைமை பற்றியும் அவ்வாறு எய்திய மேம்பாட்டான் அறமுதலாம் நாற்பொருளை எளிதின் "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால், ஆனு வறமுதலா அந்நான்கும் ஏனோர்க்கும் ஊழின்" உரைத் தருளிய பெற்றிமை பற்றியும் இவர் நாயனர் எனப்பட்டார் என்க. இதன்கண் அருட்டலைமையாதோவெனில் நூற்பாவை கடந்து மெய்ப்பொருள் தேரல் யாவர்க்குங் கூடுவதொன்றன்றாகவும், அம்மெய்ப்பொருளை 'யான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்' எனுமருளுேக்கால் யாவருமறிய நூல் செய்தமையே யென்க.

இ) தேவர்

இஃது திருவள்ளுவநாயனரது புலமையின் பெருமாண்பைக் குறிக்க எழுந்ததாகும். ஆயின் தேவர் என்ற சொற்கும் புலவர் என்ற சொற்கும் தொடர்ப்பாடெவனேவெனிலிசைத்தும். விபுதர் என்ற வடசொல் தேவர்க்கும் புலவர்க்கு மெய்துஞ் சொல்லாதலை யொப்பத் தென்மொழிக்கண் புலவர் என்ற சொல் தேவர்க்கும் புலவர்க்கு மெய்துஞ் சொல்லாதலுன்னுக. இது கருதியே "தேவ ரனையர் புலவரும்" என்று நான்மணிக்கடிகை நயமுணர்த்துதலுமோர்க. அதனுனன்றே, திருவள்ளுவ மாலையுந் "தேவிற் சிறந்த திருவள்ளுவர்" எனவும் "தேவர் திருவள்ளுவர்" எனவும், "தேவை" எனவும் ஓதுவதாயிற்று இப் புலவர் பெருமானின் பெருமாண்பினை

"அவனே புலவ னவனே யறிஞன்
அவனே தமிழை யறிந்தோன் — சிவனறிய
வள்ளுவ தேவன் வசனத்தை மெய்யாக
உள்ளுவ தேவ னுளன்"

என வரும் பாடல் விளக்கும். அன்றியும் இக்கருத்தே பற்றி

"ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னோடு பகர்ந்ததன்பின்—போயொருத்தர்
வாய்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ராய்க்கேட்க வீற்றிருக்க லாம்"

எனத் திருவள்ளுவ மாலை போற்றலுங் காண்க.

இனி, யாழ்ப்பாணம், வடகோவை, சபாபதி நாவலர் வளமார் விளக்கமொன்றுரைப்பர். அஃது பின்வருமாறு:

"அறம் பொருள் இன்ப உறுதிப் பொருளியல்களைத்
தமிழுலகந் தெளிப்துய்ய அருள் வினைதந்திற் கூறின
மையானே தேவர்" எனப்பட்டார். (திவ்-விளையாட்டு.)

௪) முதற் பாவலர்

"சாற்றிய பல்கலையும் தப்பா அருமறையும் போற்றியுரைத்த பொருளெல்லாம் "சீரிதில் தெளிந்து நூல் செய்து" முப்பால் மொழிந்த முதற்பாவல ரொப்பார் எப்பா வலரினும் இல்" எனும் இசை பெற்றிலங்கலாலும் "தப்பா முதற்பாவால் தாமாண்ட பாடலினல்" என்றபடி நால்வகைப் பாவினுள்ளும் முதன்மை பெற்றிலங்குவது வெண்பாவும் அவ்வெண்பாவினுள் முதன்மைப் பெற்றியுடையது குறள் வெண்பாவு மாகலின் அக்குறள் வெண்பாவினல் நூலியற்றி விளங்கலாலும் நாயனர்

[342 ஆம் பக்கத்தின் தொடர்ச்சி]

காரணங்கள் தமிழில் இன்மையால் அவையனைத்தையும் ஒருங்கே குறிக்க ஃ என்னும் முப்பாற் புள்ளியைப் பொதுக் குறியீடாகப் பழந்தமிழ் இலக்கண நூலார் கொண்டனர் எனக் கருதலாம். யாப்பருங்கல விருத்தியில் ஆய்தம் ஓர் ஒலியைக் குறிக்கும் எழுத்து அல்ல எனவும், ஒலியின் மாறுபட்ட தன்மையைக் குறிக்க வழங்கிய ஒரு குறியீடே எனவும் கொள்வதற்குரிய குறிப்பு ஒன்று மூன்றும் சூத்திர உரையில் மேற்கோளாகக் காட்டப்படுகிறது ஆகவே ஆய்தம் என்னும் பொதுக்குறியீடு நிலைமொழியீற்றிலுள்ள மெய் நிலையொலித்தன்மையுள்ளது என்பதைக் குறிக்க வழங்கப் பெற்றதாகக் கொள்ளலாம். இதன் அடிப்படையில் அஃறிணை, பஃறுளி, அஃது, வெஃகு போன்ற சொற்களை முறையே ★ அல்ஃறிணை, ★ பல்ஃறுளி, ★ அய்ஃது, ★ வெய்ஃகு என வரிவடிவில் புலப்படுத்தலாம்.

"முதற் பாவலர்" எனப்பட்டார். இவ்விளக்கந் தந்துதவிய நல்லந்துவனார்க்கும் கீரந்தையார்க்கும் நன்றி பாராட்டுங்கடப்பாடுடையர் தமிழராவரென்க.

முதற்பாவால் நூல் செய்தார் எனப் பொருள் தரும் "முதற் பாவலர்" என்பது யாவர்க்கும் முதன்மை பெற்றிலங்கும் பாவலரெனவும் பொருள்தரும் நயங்கண்டின்புறுக.

உ) தெய்வப் புலவர்

தெய்வ வருளானெய்திய புலமை நலமுடையாரென்க. என்னை? "தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட பனையளவு காட்டும்" பான்மையொப்ப, "அணுவைத்துளைத்தெழு கடலை புகட்டு" வதை யேய்ப்ப நின்றிலகும் நூலருளிய தெய்வப் புலமையுடையாராகலின் என்பது.

அதனானன்றோ பிறங்கொளி மாலைக்கும் கறங்கிருண் மாலைக்கும் மாலை யெனவே பெயருண்மை போன்று வள்ளுவர் பெருமானைப் புலவர் என்றவாய் ஏனையரையும் புலவரென்றுரைக்க இசைந்தது என விதந்துரைத்தார் மதுரைத் தமிழாசிரியர் செங்குன்றூர்க் கிழார் என்க.

ஊ) நான்முகனார்

"நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா நான்முகத்தோன் தான் மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்தான்" என்ற உக்கிரப் பெரு வழுதியின் கூற்றும் "பொய்யாதுதந்தான் உலகிற்குத் தான் வள்ளுவனாய் அந்தா மரைமேல் அயன்" என்ற காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார் கூற்றும் இப்பெயரை விளக்குவ.

எ) மாதாநுபங்கி

இச் சொற்குச் சபாபதி நாவலர் கருத்தே நயமுடைத்தாதல் பற்றி அதனையே யீண்டுரைப்பாம்,

பசிப்பிணி நீங்கி யுடல் வளமுறற்குத் தாய் தன் அரும் பெறன் மகவுக்குத் தண்ணளியாற் பால்சுரந்தளித்தலை யேய்ப்ப அறியாமைப் பிணி அழிவெய்தி உயிர்வளப்புறற்கு என்னும் பெருங்கருணையான் நம்மனோர்க்கு அறம், பொருள் இன்பம்

என்னும் முப்பாலையுஞ் சுரந்தளித்த திறம் நோக்கி வள்ளுவர் மாதாநுபங்கி யெனப்பட்டார். மாதாவைப் போலும் ஒழுக்கி னன் என்பது சொற்பொருள் ஆம்.

ஏ) செந்நாப் போதார்

செந்நா = சிறந்த நாவாகிய, போதார் = மலருடையவர். "என்றும் புலராது யாணர்நாட் செல்லுகினும், நின்றலர்ந்து தேன்பிலிற்றும் நீர்மையதாய்க் — குன்ருத, செந்தளிர்க் கற்ப கத்தின் தெய்வத் திருமலர் போன் மன்புலவன் வள்ளுவன் வாய்ச்சொல்" எனவரும் இறையனர் பாடல் (திருவள்ளுவ மாலை) இப்பெயரை விளக்குதல் உணர்க.

ஐ) பெரு நாவலர்

அறநூல், பொருள்நூல், இன்பநூல் எனத் தனித்தனி நூல் செய்தார் முற்ற மொழிதல் சாலாது தளர்ந்தாராக அவ ரெல்லாம் வியப்புற்றடிபணிய அம்முப்பாலையுமே கொண்டு நாற்பாலையும் நவின்ற சீர்த்தியராகலின் பெருநாவலர் எனப் பட்டார். இதனையே திருவள்ளுவ மாலையில் 'அறம் நான் கறிபொரு ளேமொன்று காமத் திறமூன்றெனப்பகுதி செய்து — பெற லரிய, நாலும் மொழிந்த பெருநாவலர்" எனத் தொடித்தலை விழுத் தண்டினர் போற்றிசைத்தாரென்க.

ஒ) பொய்யில் புலவர்

"பொய்யில் புலவன் பொருளுரை தேராய்" என்பது மணி மேகலை. பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்" என்பது திருத்தொண்டத் தொகை. இவற்ருலுணர்க.

ஓ) புலவர்

"மன்புலவன் வள்ளுவன்" "புலவர் திருவள்ளுவரன்றிப் பூமேல்," என்பது திருவள்ளுவ மாலை.

ச. நூலின் பெயர்கள்

அ) திருக்குறள்

குறள் வெண்பாட்டானியன்றமையாற் பெற்றபெயர் ஆகும். இப்பெயர் பாவானமைந்ததேனும், இப்பாவானமைந்த பெற்றி மையே நூலுக்குப் பெரிதுஞ் சிறப்பூட்டுவது. என்னை?

> "மாயோன் வடிவம் போல வேள்வியின்
> முன்னொரு குறளுரு வாகிப் பின்னது
> மூவடி முறைமையிற் செல்லாது தாந்தம்
> ஈரடி யியக்க நிரம்பா வளவையின்
> உலக மூன்று மளந்தன
> புலவன் வள்ளுவன் குறள்வெண் பாட்டே"

என வரும் பாடலை யுன்னுக என்பது. திருவள்ளுவ மாலைக் கண்வரும் "மாலுங் குறளாய்" எனும் பரணர் பாடலையும் நோக்குக.

ஆ) முப்பானூல்

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பாலென முப் பாலாய் வயங்குந் தன்மையான் இப்பெயர் போந்தது. சேய்க் குத்தாயின் முலைப்பாலே போல உயிர்கட்குறுதிபயப்பன இம் முப்பாலுமேயாம்.

> "முப்பாலு முண்டோம் முலைப்பா லினிநுகரோம்
> அப்பாலுக் கப்பாலு மாயினேம் — எப்பொருளும்
> உள்ள படியுணர்ந்தோ மோதிக் குறைதீர்ந்தோம்
> வள்ளுவ னார்வைப் பெமக்கு"

எனத் தண்டமிழ்ப் புலவர் ஒருவர் சாற்றியதுங் காண்க.

இ) உத்தரவேதம்

வடமொழி மறைக்கண் உயிர்க்குறுதிப் பொருள்களை உரைப் பது உத்தர வேதமாகிய உபநிடதமே. தமிழிலுள்ள ஏனைய அற நூல்களெல்லா மறையின் பூர்வ பாகத்தை யொத்து நிகழவுந் திருக்குறள் அந் நூல்கட்கெல்லாம் தலைமைபூண்டு தெய்வ இலக்கியமாய்த் திகழ்ந்து உறுதிப் பொருள்களை யுணர்த்து முகத்தால உபநிடதமொத்து நடத்தலால் உத்தரவேதம் எனப் பட்டது. வடமொழிமுன்மறைகட்குப் பின் மறையா யெழுந் தமையின் 'உத்தரவேதம்' ஆயிற்றெனுஞ் சபாபதி நாவலர் விளக்கம் அத்துணைச் சிறப்புடைத்தன்று. "ஆரியம் வேத முடைத்து தமிழ்திருவள்ளுவனார் ஓதுங் குறட்பா வுடைத்து" என விகற்பித்தே விளம்பினர் வெண்ணாக்கஞ் சாத்தனுருமென்க.

ஈ) தெய்வ நூல்

எத்துணை யறிஞர் கூடினும் இத்தகு சுருங்கச் சொல்லி விளங்க வைத்து நூல் முடித்தல் இயலாதன்றே. அவர்தாம் பெருக்கச் சொல்லினும் முற்றுற மொழிதல் இயலாதன்றே. ஆகலின் இஃது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் அருளால் முகிழ்த்ததேயாம். இத்திறம் நோக்கித் "தெய்வ நூல்" என்றூர் சான்றேரென்க.

உ) பொய்யாமொழி, வாய்மொழி

பொய்யா மொழியாய் நடத்தலினிப் பெயர்களுற்றன

ஊ) வாயுறை வாழ்த்து

"வாயுறை வாழ்த்தே வயங்க நாடின்
வேம்புங் கடுவும் போல வெஞ்சொல்
தாங்குத லின்றி வழிநனி பயக்குமென்
றேம்படைக் கிளவியின் வாயுறுத் தற்றே"

என்று தொல்காப்பியச் செய்யுளியல் ககஉ — நூற்பா கூறும் இலக்கணம் திருக்குறட்கு இசையுமாறு,

"இன்பமுந் துன்பமு மென்னு மிவையிரண்டு
மன்பதைக் கெல்லா மனமகிழ — அன்பொழியா
துள்ளி யுணர வுரைத்தாரே வோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து"

என வரூஉம் மதுரை அறுவைவாணிகன் இளவேட்டனார் பாடலாலுணர்க.

எ) திருவள்ளுவர்

திருவள்ளுவரான் யாக்கப்பட்டமையான் இப் பெயர் கொண்டது. கருத்தாவாகு பெயர் என்க. இதனை வள்ளுவனார்வைப் பெனவுங் கூறுவர்,

ஏ) தமிழ் மறை

மறைப் பொருளைத் தமிழாற் கிளத்தலான் இந்நூல் தமிழ் மறையாயிற்று.

ஐ) பொதுமறை

குறிப்பிட்ட வகுப்பினரல்லாலேனையர் தீண்டின் தூய்மை யினீங்கு மட்பாண்ட மொத்த வடமொழி மறைபோலாது, யாவருந் தீண்டற்குரித்தாய்த் தன்மை திரியாப் பொற்பாண்ட மொத்துத் திகழ்வது திருக்குறள் ஆகலின் பொது மறையா யிற்று. அவ்வாறுதல்

"செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே ஆராயி னேனை
யிதற்குரிய நல்லாதா ரில்"

எனும் வெள்ளி வீதியார் பாடலானுணர்க. செய்ய மொழிக் குரியார் அந்தணரே என்பதும் வஞ்சகமேயாம். மறையாவர்க் கும் உரித்தே என்க.

ஒ) அறம்

"செய்தி கொன்றோர்க்குய்தியின்றென அறம் பாடிற்றே ஆயிழைகணவ" எனவரூஉம் ஆலந்தூர் கிழார் பாடலான் திருக்குறட்கு "அறம்" எனும் பெயருண்மை யுணர்க. திருக் குறள் முப்பாலுடைத்தே ஆயிறும். அறம் வன்மையும் முதன் மையு முடைத்தாய் எல்லாப் பாலினும் சென்று படரும் ஆற்ற லதாகலான் "அறம்" எனப்பட்டது.

ஓ) முதுமொழி

"முதுமொழி நூல்" என்ற பெயர் நரிவெரூஉத் தலையார் பாடிய பாடலில் (திருவள்ளுவ மாலை) பயில்வதறிக. அன்றி யுந் திருக்குறளை விளக்க வெழுந்த நூல்களும் இப் பெயர் பற்றியே விளங்குவ. முதுமொழிமேல் வைப்பு, முதுமொழி வெண்பா முதலிய காண்க.

"அகரமுதல" எனுங்குறளை அடுத்த கட்டுரையில் காண் பாமாக.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

தொல்பொருளாய்வும் தமிழர் பண்பாடும்

திரு. சா. குருமூர்த்தி, எம். ஏ., எம். லிட்.,
டிப். மானிடயியல்,
தொல்பொருளாய்வுத்துறை, சென்னைப் பல்கலைக் கழகம்.

3

தொல் பொருள்கள் நிலத்தின் அடியிலிருந்து எடுக்கப்படும் முறைகள் :-

தொல் பொருள்களைக் கொண்ட மேடுகளின் தோற்றத்தைப் பற்றி முன்னரே கண்டோம். ஆதிகால மக்கள் வாழ்ந்த இடங்களில், அவர்கள் பயன்படுத்தி, பின்பு கழிக்கப்பட்ட பொருள்கள் நிலத்தடியில் பன்னெடுங்காலம் இருக்க நேருகின்றன. பழைய மண் தரைகள் அழிக்கப்பட்டு, புதியவை இடம் பெறலாம். வெள்ளத்தின் காரணமாகவோ அல்லது வேறுபல இயற்கைக் கோளாறுகளினலோ கட்டிடங்கள் அழிந்து போகலாம். வெள்ளம் வடிந்த பிறகு மறுபடியும் அங்குக் குடியிருப்பு ஏற்படலாம். மேலும் இத்தகைய இடங்களில் பிற்காலத்திய மக்களால் குழிகள் பல தோண்டப்படுகின்றன. இந்தக் குழிகள் இறந்தவர்களைப் புதைப்பதற்காகவோ அல்லது கழிவுப் பொருள்களை எறிவதற்காகவோ தோண்டப்பட்டிருக்கலாம். எனவே, இத்தகைய மாறுதல்களுக்கான தடையங்களைக் கண்டுபிடித்து அவற்றை ஆராய வேண்டியது ஒரு இன்றியமையாச் செயலாகும். பூமியைத் தோண்டிச் செல்லுங்கால், இத்தடையங்களையும், இவற்றின கால எல்லையையும் கணக்கிடல் வேண்டும். பல்வேறு காலங்களைச் சேர்ந்த தொல்பொருள்களைத் தன்னகத்தே கொண்டுள்ள மண் அடுக்குகளின் அமைப்பை ஆராய்வதே அகழ்வாராய்ச்சி எனப்படும்.

இம்மண் வரிசைகளின் நிறம், அமைப்பு ஆகியவற்றைக் கொண்டு, பல்வேறு காலங்களைச் சேர்ந்த அடுக்குகள் பிரிக்கப்படுகின்றன. இவற்றைப் பிரித்த பின்பு, அவற்றின் தொன்மை, ஒன்றுக்கொன்று இருக்கின்ற தொடர்பு, ஆகியவற்றைக் கணித்தாக வேண்டும். மண்ணுக்கடியில் அகழ்வாராய்ச்சி நடத்துவது எப்படி என்றும் அதற்காகக் கையாளப் படும் முறைகள் எவை என்பதனையும் சற்று ஆய்வோம். புதைபொருளியலில் பூமியைத் தோண்டுவது என்பது பொதுப்

பணித்துறையினர் வெட்டுவது போன்றதல்ல. இதற்குச் சிறப்புப் பயிற்சி தேவைப்படுகின்றது. அகழ்வாராய்ச்சியில் பொதுவாக இரண்டு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன.

1) பரவலாகத் தோண்டும் முறை (Horizontal Excavations)
2) ஆழத் தோண்டும் முறை (Vertical Excavations)

பரவலாகத் தோண்டும் முறை: இம்முறைப்படித்தான் அரப்பா **மொகஞ்சோதாரா** போன்ற நகரங்களில் அகழ்வாராய்ச்சிகள் நிகழ்த்தப்பட்டன.

இம்முறையின் தத்துவம், தொன்மையான ஒரு இடத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய புதை மண்ணை மட்டும் முழுக்கவோ அல்லது அதிக அளவிலோ தோண்டிப் பார்ப்பதாகும். இதன்படி ஒரு குறிப்பிட்ட காலத்துக்குரிய பண்பாட்டுச் சின்னங்களை ஒரே இடத்தில் பெருமளவில் பெற வாய்ப்புள்ளது. மேலும் பரவலான முறையில் அதிக அளவில் நிலப்பரப்பைத் தோண்டுவதன் வாயிலாக ஒரு இடத்தில் கிடைக்கப் பெருத தடையங்கள் மற்ருெரு இடத்தில் காணபதற்கு வாய்ப்பு உள்ளது. மண்ணுக்குள் மறைந்து கிடக்கின்ற பண்டையக் கோட்டைச் சுவர்கள், அரண்மனைகள், வீதிகள் போன்றவற்றை எளிதில் கண்டுபிடிக்க இம்முறையினைக் கையாளுகின்றனர்.

ஆழத் தோண்டும் முறை.

இம்முறைப்படி ஒரு குறிப்பிட்ட இடத்தில், மிகக் குறுகிய நிலப் பரப்பில் இயற்கை மண் அல்லது பாறைவரை (Naturalsoil) ஆழத் தோண்டிச் செல்வதாகும் ஆழமாகத் தோண்டுவதனுல் அவ்விடத்தில் புதைந்து கிடக்கின்ற பல்வேறு காலங்கட்குட் பட்ட தொல் பொருள்களை ஆராய ஏதுவாகின்றது மேலும் இயற்கைப் பாறை வரையில் தோண்டுவதினுல் அந்த இடத்தில் மக்கள் முதன் முதலில் குடியேறியது முதல் தொடர்ச்சியாக அவ்விடத்தில் தோன்றி மறைந்த பலகாலங்கட்குட்பட்ட பல்வேறு மக்களது வரலாற்று, பண்பாட்டுப் பெருமையை அறிய முடிகின்றது. ஆழத்தோண்டினுல்தான் பல்வேறு மண் அடுக்குகளைப் பிரித்து அவற்றிற்குரிய காலத்தையும் வரையறை செய்து, அவை பறைசாற்றும் பண்பாட்டுச் சிறப்பினையும் உணரலாம். அதுபோலவே தோண்டி எடுக்கப்படும் தொல் பொருள்களையும் அவற்றிற்குரிய மண் அடுக்குகளுடன் இணைத்துக் கால வரம்பைக் கணக்கிடல் வேண்டும்.

இம்முறை தொல்பொருள்களின் உண்மையான காலத்தை வரையறுத்துணரப் பெருமளவில் உதவி செய்கிறது. எனினும் குறைந்த அளவு நிலப்பரப்பில் தோண்டுவதன் காரணமாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்குட்பட்ட ஒரு பண்பாட்டின் பல்வேறு கூறுகளை அறிந்து கொள்ள இயலாமை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் பெரிய கட்டிடங்கள், சுவர்கள், கோவில்கள் போன்றவற்றை இம்முறையைக் கையாண்டு தோண்டுவோமானால் அதிக உழைப்பு, காலம், பொருள் ஆகியவை வேண்டப்படுகின்றன. எனினும் தொல்பொருளியலுக்கு இந்த ஆழத் தோண்டும் முறையே உயிர்நாடியெனக் கருதப்படுகின்றது.

ஆழத் தோண்டும் முறையின் விளக்கம் :— தோண்டுவதற்குரிய இடத்தைத் தேர்ந்தெடுத்தபின், அகழ வேண்டிய குழியின் அளவுகளை (நீளம், அகலம்) வரையறுத்து நிலத்தின் மேற்பரப்பில் அடையாளமிடப்படுகின்றன. அக்குழியின் அளவுக்குட்பட்ட நிலப்பரப்பின் மேற்பாகத்தைப் புற்களேதுமின்றி நன்றாகச் சுத்தம் செய்தல் இன்றியமையாததாகும். குழியின் வடக்கு, தெற்கு ஆகிய இரு பக்கங்களிலும் ஒரு மீட்டர் இடைவெளிக்கு ஒரு மரமுளை (Peg) யாக நடவேண்டும். பிறகு அந்த முளைகளை இணைக்கும் வகையில் நூற்கயிற்றைக் கட்ட வேண்டும். ஒரு பக்கமுள்ள மர முளைகளுக்கு I, II, III என்றும் மற்றொரு பக்கமுள்ளவைகளுக்கு I,' II,' III',... என்றும் எண்கள் கொடுக்கப்படும். தோண்ட ஆரம்பிப்பதற்கு முன் பாகக் குழியின் மேற்பரப்பைப் புகைப்படம் பிடித்துக் கொள்ள வேண்டும்.

தோண்டுவது என்றால் பெரிய மண்வெட்டிகளைக் கொண்டு தோண்டுவது என்பதன்று சிறியகளைக்கொத்துகளைக்கொண்டு, சிறிது சிறிதாக அதாவது அங்குலம் அங்குலமாக நிலப்பரப்பைத் தோண்டுவார்கள். தோண்டிய மண்ணை உடனேயே அப்புறப்படுத்த மாட்டார்கள். அதைக் கட்டிகளின்றி உடைத்து, கைவிரல்களாலும் கத்தியினாலும் அலசிப்பார்த்த பிறகே அப்புறப்படுத்தல் வேண்டும். ஏனென்றால் மண்ணுடன் கலந்த கடுகளவை ஒத்த பாசிகள், சிறிய காசுகள், மற்றும் ஏனைய தொல்பொருள்கள் கிடைக்கப் பெறலாம். இத்தொல் பொருள்கள் கிடைத்தால் அவைகள் கண்டெடுக்கப்பட்ட இடத்தின் அடையாளம், ஆழம் இவற்றை உடனுக்குடனே பதிவு செய்தல் வேண்டும். கிடைத்த பொருள் எந்த இரு மரமுளைகளுக் கிடையில் உள்ள இடப்பரப்பில் அகப்பட்டது என்பதே அப்பொருளின் இட அடையாளமாகும்.

கிடைக்கும் எல்லாப் பொருள்களையும் ஒழுங்காக அவ்வப் பொழுது அவைகளுக்குரிய மண் வரிசையுடன் இணைத்துப் பதிவு செய்து காகித உறைகளினுள் போட்டு வைத்துப் பாது காத்தல் வேண்டும். அதே போல் ஏராளமான பானைஓடுகள், முழுப்பானைகள் ஆகியவற்றையும் அவற்றிற்கு உரிய மண் வரிசைப்படி தனி இடத்தில் வைப்பர். இவ்வாறு தோண்டு கையில் மண்ணின் நிறம் (Colour) தன்மை (Texture) ஆகிய வற்றை ஆராய்ந்து, மண் வரிசைகளின் மாற்றத்தைக் கண்டு கொள்ளுதல் மிகவும் இன்றியமையாததாகும். சில வேளைகளில் கிடைக்கும் தொல்பொருள்களின் வாயிலாக மண் வரிசைகளின் மாற்றத்தை உணரலாம். மண் வரிசைகள் மேலிருந்து கீழாக 1, 2, 3, — என எண்களிடப்படும். இறுதியில் தோண்டி முடித்த பிறகு குழியின் நான்கு பக்கங்களிலுமுள்ள சுவர்களைச் சமப்படுத்துவார்கள். இவ்வாறு சுவர்களைச் சமப்படுத்துவதி னால், பல மண் வரிசைகள் நன்றாகத் தெரியவரும். இவற்றைக் கோடுகளினால் குறித்திட வேண்டும். குழியின் சுவர்களில் அந் தந்த மண் வரிசைகளைக் காட்டும் 1, 2, 3 .... என்று எண் களிடப்பட்ட குறிப்புச் சீட்டுகள் (Labels) மாட்டப்படும். பிறகு தோண்டி எடுக்கப்பட்ட பானை ஓடுகள், மற்றும் பல தொல் பொருள்களை ஆராய்ந்து அவை எவ்வெவக் கால வரம்புகளுக் குட்பட்டவை என்பது நிர்ணயிக்கப்படும்.

மண் அடுக்குகளில் எவை எவை எந்தக் காலவரம்பிற்கு உட்பட்டவை என்பதையும் வரையறுத்துக் கொள்ள வேண்டும். இவற்றை வரையறுக்கப் பேருதவியாக இருப்பன காசுகளும் பானை ஓடுகளுமே ஆகும். கால வரம்புகளை வரையறுக்கும் போது ஒரு சிறந்த கருத்தை சிந்தையில் வைத்துக் கொள்ள வேண்டும். மண் அடுக்குகளுக்கு மேலிருந்து கீழ் நோக்கி எண்களிடப்படும். ஆனால் பல கால வரம்புகளுக்குட்பட்ட வெவ் வேறு பண்பாடுகள் கீழிலிருந்து மேல் நோக்கிக் கணிக்கப்படும். ஏனெனில் பொருள்களின் தொன்மை கீழிருந்து மேலாகக் கணக்கிடப் படுவதேயாகும். அதாவது மிக அடியில் உள்ள மண் அடுக்குகள் மிகப் பழங்காலத்தைச் சார்ந்தவை என்பதேயாகும். இதுவே தான் மண் அடுக்குகளை ஆராய்வதில் உள்ள தத்து வமாகும். குழியின் பக்கங்களைச் சமப்படுத்திய பின்பு, அவை களைப் படம் பிடித்துக் கொள்ளுவார்கள். சுவர்கள், பெரிய பானைகள், மண் தரைகள் காணப்பட்டால் அவற்றை உடனுக் குடன் படம் பிடித்துப் பதிவு செய்தல் வேண்டும். மேலும்

[355 ஆம் பக்கம் பார்க்க]

'பெருங்கதை'ப் பெயராய்வு

திரு. இரா. இளவரசு, க. மு.
தமிழ்த்துணைப் பேராசிரியர், சரபோசி அரசினர் கல்லூரி.
தஞ்சை.

பெருங்கதை :— வட இந்தியப் பகுதிகளைக் களமாகக் கொண்டு தமிழ்ச் சாயலோடு படைக்கப்பட்ட முதற்றமிழ்க்காப்பியம்—சங்க இலக்கியச் சொற்செறிவும் காப்பிய நடை நயங்களும் இணைந்தொளிர்வது—தரத்தாலும் அளவாலும் சிலப்பதிகாரம் கம்ப ராமாயணம் ஆகியவற்றோடு ஒப்பவைத்து எண்ணத்தக்கது — சீவக சிந்தாமணி, கம்ப ராமாயணம் ஆகியவற்றிற்குக் காப்பிய நயங்களில் முன்னோடியாய் அமைவது—வேறு எத் தமிழ்க்காப்பியத்தும் காண இயலா நிலையில் பலவகைக் கருவிகள், பழக்கவழக்கங்கள், கட்டட அமைப்புகள், விளையாட்டுகள் பற்றிய சமுதாயச் செய்திகளையெல்லாம் நுட்பமாகப் பேசும் காப்பியம இது. இச்சமணக்காப்பியம் 'காயமே இது பொய்யடா' என்னாது வையத்துள் வாழ்வாங்கு வாழ்தலை வற்புறுத்துகிறது. புலவர்க்குப் புலவராகிய அடியார்க்கு நல்லாரே "......இரண்டாம் ஊழியதாகிய கபாடபுரத்தின் இடைச்சங்கத்து......பாடப்பட்ட கலியும் குருகும் வெண்டாளியு முதலிய செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை"[1] எனப் பாராட்டியுள்ளார். கொங்குவேளிர் இயற்றிய — தமிழ்த் தாத்தா உ. வே. சா. அவர்கள் 1924-இல் முதற்பதிப்பாகத் தமிழ் உலகிற்கு அறிமுகப் படுத்திய — ஆறு காண்டங்களும் நூற்றியைம்பது காதைகளும் கொண்டதாகக் கருதப்பெறும் இக்காப்பியம் இன்று முழுமையாகக் கிடைக்காத ஐந்து காண்டங்களையும் தொண்ணூற்றியொன்பது காதைகளையும் அடக்கியுள்ளது. நவில்தொறும் நயம் பிலிற்றும் இக்காப்பியம் நவிலாமையாலேயே— படித்தால் புரியாது என்னும் பழமை அச்சத்தாலேயே குடத்துள் விளக்காயிருக்கிறது.

காப்பியத்திற்குப் 'பெருங் கதை' என்று இன்று வழங்கப்படும் பெயர் பதிப்பாசிரியர் உ வே. சா. அவர்கட்குக் கிடைத்த பழஞ்சுவடிகளில் இருந்ததா? உ. வே. சா. பெயர் மாற்றம் செய்தாரா? நூற்குரிய சில பெயர்களில் எப்பெயர் பலரும் அறிந்தபெயராக இருந்தது? நூலாசிரியர் இட்டுக்குறித்த பெயர் எது? என்னும் வினாக்களின் விடை விளக்கமே இக்கட்டுரை.

நூலை அருமையாகப் பதிப்பித்த உ. வே. சா. அவர்கள் தம் முதற் பதிப்பு இரண்டாம் பதிப்பு முகவுரைகளில் [2] பதிப்பிற்கு அடிப்படையாக அமைந்த, தமக்குக் கிடைத்த இரண்டு பழஞ்சுவடிகளும் [3] 'கொங்கு வேண்மாக்கதை' என்று வரைந்திருந்த ஒரு சீட்டை மேலே பெற்றிருந்தன என்று குறிப்பிடுகின்றார். முதற் சுவடியைப் பிரித்துப் பார்த்த பொழுது வழக்கமாக நூற்பெயர் குறிக்கப்பட்டிருக்கும் முதல் ஏடும் அதையுள்ளிட்ட எண்பது ஏடுகளும் காணப்படவில்லை என்கிறார். இதனால் பழஞ்சுவடிவழி அறிவிக்கப்பெறும் நூற்பெயர் 'கொங்குவேண்மாக்கதை' என்பதே, பிற அல்ல என்பது தேற்றம்.

பழஞ்சுவடிகளோடிருந்த பெயர் நூல் வடிவில் காப்பியம் வெளிவந்த பொழுது 'பெருங்கதை' என மாற்றப்பட்டுள்ளது. மாற்றியதைப்பற்றிய எக்குறிப்பும் முகவுரையிலோ பிற பகுதிகளிலோ வெளிப்படையாக இல்லை.

'கொங்குவேண்மாக்கதை' எனும் காப்பியப் பெயர் பழஞ்சுவடிகளின் முதலில் கோக்கப்பட்டிருந்த சீட்டுக்களில் மட்டுந்தான் இடம் பெற்றிருந்ததா? வேறெங்கும் குறிப்பிடப்படவில்லையா? அதனால்தான் உ. வே. சா. பெயர் மாற்றம் செய்

(353 ஆம் பக்கம் தொடர்ச்சி)

வரைப்படத் தாளில் குழியின் சுவர்களில் காணப்படுகின்ற மண் அடுக்குகளின் நீளம், அகலம், மண்ணின் நிறம், தன்மை ஆகியவற்றை வரைதல் வேண்டும்.

மண்ணைத் தோண்டுவது கடினமான பணியல்ல. ஆனால் தோண்டுகையில் கிடைக்கப் பெறும் தொல் பொருள்களின் கால வரம்பைக் கணக்கிட்டு, அவை காட்டும் ஆதி மனிதனின் பண்பாட்டுப் பெருமையை உலகினுக்கு உணர்த்த முற்படும் பணிதான் மிகக் கடினமான ஒன்றாகும். நிலத்தின் மேற்பரப்பில் கிடைக்கப் பெறும் தொல் பொருள்களின் கால வரம்பை நிர்ணயிக்க இயலாது. ஆனால் அகழ்வாராய்ச்சிகளின் வாயிலாகக் கண்டெடுக்கப்படுகின்ற தொல்பொருள்களுக்குக் கால வரம்பை எளிதில் கணிக்க முடியும். எனவே பண்டைய மக்களது பண்பாட்டுப் பெருமையின் சிறப்பையும், தொன்மையும் ஒருங்கிணைத்து உணர உறுதுணையாக விருப்பது அகழ்வாராய்ச்சியாகும்

[வளரும்]

தாரா? எனப்பார்ப்போம். முதற்சுவடியோடிருந்த 'கொங்கு வேண்மாக்கதை' என்றெழுதிய சீட்டைக் கண்டதும், சாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்துப்பாயிரம் ஏழாம் நூற்பா உரையில் '......சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப்பாட்டு, கொங்குவேண்மாக்கதை முதலியவற்றோடு சேர்த்து அச்செய்யுட்களோடு ஒன்றுக்குவர்'' என்றெழுதிய பகுதி உ வே சா. அவர்கட்கு உடனே நினைவு வந்ததாம். இதனால் சுவடியைப் பார்ப்பதற்கு முன்பே உ. வே. சா, அவர்கட்கு அறிமுகமாயிருந்த நூலின் ஒரே பெயர் 'கொங்குவேண்மாக்கதை'யே எனலாம். மேலும் அவரே தம் முகவுரையில் 'மாக்கதை' என்னும் பெயர் பெருந்தேவனுர் பாரதம் கம்பராமாயணம் என்பனபோல ஆக்கியோர் பெயருடன் சார்ந்து கொங்குவேண்மாக்கதை எனவும்...... பழைய உரைகளில் வழங்கும்'' என்கிறுர். தனிப்பாடலொன்றும் 'உருத்தக்க கொங்குவேண்மாக்கதை'[4] என நூற்பெயர் சுட்டும் இவற்ருல் ஏட்டுச் சுவடிச் சீட்டில் இடம் பெற்றிருந்த நூற்பெயர் முன்னேரால் குறிப்பிடப்பட்டு வழங்கிவந்ததே என்றறியலாம்

'கொங்குவேண்மாக்கதை' என்னும் ஒரு பெயர்தான் நூற்கு வழங்கி வந்ததா? எனின் அன்று. பழஞ்சுவடிகளை எழுதிய காலத்தும் அதையொட்டியும் நன்கு தெரிந்திருந்த பெயர் அது' எனக்கொள்ளலாம். நூற்குரிய பிற பெயர்களாகக் **கதை, மாக்கதை, பெருங்கதை, உதயணன் கதை** ஆகியவற்றை உரையாசிரியர்கள் வழித்தாம் அறிந்ததாக முகவுரை[5] யில் உ. வே. சா குறிப்பிடுவார். நிரலே இப்பெயர்களை நோக்குவோம்.

அடியார்க்கு நல்லார் தம் சிலப்பதிகார உரையில் பத்து இடங்களில் பெருங்கதையிலிருந்து மேற்கோள் காட்டுவார் அவற்றுள் எட்டு இடங்களில் நூற்பெயர் 'கதை' என்றே குறிப்பிடப்படுகின்றது.[6] அவ்வெட்டு மேற்கோள்களில் மூன்றே இன்று பெருங்கதையில் உள்ளன.[7] ஏனைய ஐந்தும் மூலத்திலிருந்து மறைந்துபோன பகுதிகளில் இருந்திருக்க வேண்டும் அடியார்க்கு நல்லார், உரைப்பாயிரத் தொடக்கத்திலேயே 'உதயணன் கதை' என நூற் பெயர் சுட்டி அதன் பின்னரே 'கதை' எனக்குறிப்பிடுவதால் எளிமை கருதிச் சுருக்கிக் கூறியிருப்பார் எனலாம். மேலும் 'கதை' எனப்பெயரிய தமிழ்க் காப்பியம் பிறிதின்மையால் அது பெருங்கதையொன்றையே குறிக்குமெனக் கருதியிருப்பார். ஆக, அடியார்க்கு நல்லாரால் மட்டும் குறிக்கப்பெறும் '**கதை**' **நூலின் முழுப்பெயரன்று சுருக்கப் பெயரே**.

'மாக்கதை' என்பது பெரும்பாலும் நூலாசிரியர் பெயரோடு இணைத்து 'கொங்குவேண்மாக்கதை' என்றே வழங்கப் படுகின்றது [8] இதுவரை கிடைத்த சான்றுகளில் தனித்து இடம் பெறுவதாகத் தெரியவில்லை. எனவே 'மாக்கதை' என்பது இணையப்பெயராக வருவதே, நூலின் தனிப்பெயரன்று எனத்துணியலாம்.

உ. வே சா இட்டு வழங்கியதும் இன்று நூற்பெயராகப் பலர்க்கும் தெரிந்திருப்பதும் பெருங்கதை' என்பது. இப் பெயர் அடியார்க்கு நல்லாரால் மட்டுமே அதுவும் ஒரே ஓர் இடத்தில் சிலம்பின் உரையில் மேற்கோளாகக் காட்டப்படுகின்றது. வேனிற் காதையின் 23—6 வரிகளின் உரையில் 'விருத்தி' என்பதை விளங்குங் காலை பெருங்கதை உஞ்சைக் காண்டம் 'நருமதை சம்பந்தம்' என்ற காதையின் 44—8 வரிகளை [9] எடுத்துக்காட்டி 'எனப் பெருங்கதையுட் கூறினமையானும் கொள்க' என்பர் அடியார்க்கு நல்லார். இவ்வோர் இடமேயன்றி வேறெவ்விடத்தும் எவராலும் 'பெருங்கதை' என்ற நூற்பெயர் குறிப்பிடப் படவில்லை

எஞ்சி நிற்பது 'உதயணன்கதை'. இப்பெயர், பல உரையாசிரியர்களாலும் வேறு எப்பெயரினும் அதிகமாகக் குறிப்பிடப்படுகின்றது தொல்காப்பிய உரையாசிரியராகிய பேராசிரியர் செய்யுளியலின் 'ஞகாரை முதலானகாரை யீற்றுப் புள்ளி யிறுதி யியைபெனப் படுமே' என்ற நூற்பா (240) உரையில் "னகர வீற்றுனிற்றுப் பொருளுமியைந்து சொல்லுமியைந்து வந்தன.. கொங்கு வேளிராற் செய்யப்பட்ட உதயணன்கதையும் போல்வன" என்று நூற்பெயர் காட்டுவார். [10] அடியார்க்கு நல்லார் 'காப்பியம்' என்ற சொல்பற்றிச் சிலப்பதிகார உரைப்பாயிர இரண்டாம் பத்தியில் பேசுங்கால் 'கூத்தியரிருக்கையும் சுற்றியதாகக் காப்பிய வாசனை கலந்தவை சொல்லி' (4. 3. 41—2) எனும் பெருங்கதைப் பகுதியை எடுத்துக் காட்டி" ... செய்யுளிலக்கியம் ஆராய்ந்து செய்த உதயணன் கதை யுள்ளும்... கூறினமையானும்" எனத் தான் காட்டும் முதன் மேற்கோளிலேயே 'உதயணன்கதை' என்று நூற்பெயர் சுட்டுவர். மேலும் யாப்பருங்கலவிருத்தியுரையாசிரியர் (நூற்பா 53, 69 விசேடவுரை) வீரசோழிய உரையாசிரியர் (யாப்புப்படலம் 9 ஆம் நூற்பா உரை) தக்கயாகப்பரணி உரையாசிரியர் (தாழிசை 33, 137, 258 .. உரை) முதலிய பலர் காட்டும் மேற்கோட் பகுதிகளிலெல்லாம் உதயணன் கதை' என்றே

நூற்பெயர் குறிப்பிடப்படுகின்றது. இதனால் வேறு எப்பெயரினும் பலரும் அறியப் பரவலாகத் தெரிந்திருந்த — நூற்குவழங்கிவந்த பெயர் 'உதயணன் கதை' யே என்பது உறுதியாகின்றது.

ஏட்டுச்சுவடிகளின் மேல் சீட்டில் எழுதியிருந்த பெயரை விலக்கிய உ. வே. சா முறைப்படி, பலராலும் குறிப்பிடப்பட்ட-கதையுள்ளடக்கத்தையும் காட்டுகின்ற 'உதயணன் கதை' என்னும் பெயரை நூற்கு இடுவதை விடுத்து ஒரே ஓர் இடத்தில் மட்டும் குறிப்பிடப்பட்ட - கதைப்பொருண்மையைக் காட்டாத 'பெருங்கதை' என்னும் பெயரைத் தேர்ந்தெடுத்துள்ளார். தற்சார்பின்றி நோக்கின் ஏட்டுச்சுவடியொடு இருந்த பெயரையோ பரவலாகத் தெரிந்த பெயரையோ இடுதல் முறை. மாறாகப் 'பெருங்கதை' யைத் தேர்ந்தெடுத்ததேன்? பெயர் மாற்றியதைப்பற்றி எதுவும் பேசாததைப் போலவே மாற்றியதற்கான காரணங்களைப் பற்றியும் உ. வே சா. எதுவும் உரைத்திலர். 'பெருங்கதை' யைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் எதுவாக இருக்கும் எனப்பார்க்கலாம்.

பெயர்மாற்றக் காரணத்தையறியப் பெருங்கதையின் முதனூல் பற்றிய உ. வே. சா. வின் கருத்து துணை செய்யும். குணாட்டியர் பைசாச மொழியில் இயற்றிய பிருகத்கதாவை ஆதாரமாகக் கொண்டு கங்கதேசத்தரசன் துர்விநீதன் வடமொழியில் செய்த 'பிருகத்கதா' வே பெருங்கதையின் முதனூல் எனக்கொள்வார்[11] 'பெருங்கதை என்பது இந்நூலுக்கு முதனூலால் வந்த பெயராகும்' என்ற முகவுரைப்பகுதி கூர்ந்து நோக்கற்குரியது. இதனால் 'பிருகத்கதா' என்னும் முதனூற்பெயரே 'பெருங்கதை' என்னும் நூற்பெயர்க்குக் காராணமானது என்னும் உ. வே சா. கருத்தை உணரலாம். 'மாக்கதையும்' 'பெருங்கதையும்' ஒரு பொருண்மைய எனினும் மாக்கதைக்கும் பிருகத்கதாவிற்கும் இல்லாத ஒலித்தொடர்பு பெருங்கதைக்கும் பிருகத்கதாவிற்கும் உள்ளது இந்தக் கருத்துக்களைப் பின்புலமாகக் கொண்டு நோக்கினால் முதனூல் பற்றிய தம் கருத்தை உறுதிப்படுத்தும் சான்றுகளில் பெயரீடும் ஒன்றாக அமையும் எனக்கருதியே 'பெருங்கதை, என்னும் பெயரை உ. வே. சா. தேர்ந்தெடுத்திருக்கலாம் என்ற முடிவுக்கு வரவேண்டியுள்ளது இம் முடிவுக்கு அரண் செய்யும் வகையில் உ. வே. சாவிற்குப் பின்வந்த சிலரும் 'பெருங்கதை' ப் பெயர்க்கும் முதனூலுக்குமுள்ள தொடர்பைப் பேசுவர். கலைக்களஞ்சியம் 'பெருங்கதை' பற்றி விளக்கும்போது ''பிருகத்கதா என்ற சொற்றொடர் தமிழில் பெருங்கதை, மாக்கதை என்று பொருள்படும்'' என்கிறது[12].

இங்கே பெருங்கதை எனும் நூற்பெயரே 'பிருகத்கதா' என்பதன் தமிழாக்கம் என்னும் கருத்திற்கு உ. வே. சா. வின் பெயரிடு இடந்தருகிறது. மேலும் அறிஞர் கா சு பிள்ளை அவர்கள் "ஆரியத்திற்பைசாச மொழியில் குணாட்டியர் என்னும் புலவர் கி. பி. முதல் நூற்றாண்டில் கோசாம்பி நகரத்தில் அரசாண்ட உதயணன் என்னும் வீரனைப்பற்றி இயற்றிய பெருங்கதையைத் தழுவி இந்நூல் இயற்றப்பட்டமையால் இதற்குப் பெருங்கதையென்ற பெயர் வழங்கலாயிற்று"[13] என்று எழுதுவதும் நூற்பெயரே முதனூலைக்காட்டி நிற்கும் என்ற கருத்தை உறுதிப்படுத்துகிறது.

இனி, நூற்குரிய பெயர்களில் கொங்குவேள் இட்டுக் குறித்தது - தொன்மையானது எது எனக் காண்போம். பொதுவாகக் காப்பியங்களுக்குரிய சீவகசிந்தாமணி, மணிமேகலை, குண்டலகேசி, இராமகாதை, (இராமாவதாரம்) திருத்தொண்டர்புராணம், யசோதரகாவியம். முதலிய பெயர்களை நோக்கினல் கதை மாந்தர்களோடு தொடர்புடையனவாய்ப் பலவும் அமைந்திருக்கின்றன. 'சிலப்பதிகாரம்' என்னும் பெயருங்கூட கதை மாந்தர் தம் அணியைச் சுட்டி நிற்கின்றது இந்த மரபுப்படி நோக்கும்போது 'உதயணன் கதை' என்பதே தொன்மையான பெயர் என்று தெரிகிறது. அடியார்க்கு நல்லார், பேராசிரியர், தக்கயாகப்பரணி உரையாசிரியர் என வழிவழிப் பலரும் 'உதயணன் கதை' என்றே குறிப்பிடுவதும் ஈண்டு நோக்கத்தக்கது. அதோடு ஐஞ்சிறுகாப்பியங்களில் ஒன்றாக எண்ணப்படுவதும், பெருங்கதையை அப்படியே தழுவிச் சற்று முன்னும் பின்னும் கூட்டிச் செய்யப்பட்டதுமான 'உதயண குமார காவியத்தின் பெயரையும் இத்தொடர்பில் எண்ணிப் பார்க்கலாம். மேலும் காப்பியங்கள் சில காலப் போக்கில் பெற்ற பெயர் மாற்றத்தைக் கருத்திருத்திப் பார்த்தால் 'உதயணன் கதை' யே கொங்குவேள் இட்டபெயர் என்ற முடிவு கிடைக்கிறது. இராம காதை எனக் கம்பர் இட்டபெயர் கம்ப ராமாயணம் என மாறியதைப்போல் 'உதயணன் கதை' கொங்குவேண் மாக்கதை ஆகியது எனவும் சீவகசிந்தாமணி சிந்தாமணி என்று குறிப்பிடப்படுவதைப்போல் 'உதயணன் கதை', 'கதை' என்று குறிப்பிடப்பட்டது எனவும், 'திருத்தொண்டர் புராணம்' எனச் சேக்கிழார் இட்டபெயர் 'பெரிய புராணம்' ஆகியதை ஒப்ப உதயணன் கதை 'பெருங் கதை' ஆனது எனவும் கொள்ளலாம்.

பழஞ்சுவடிகளோடிருந்த நூற் பெயரை உ. வே. சா. மாற்றினரென்பதும் மாற்றியதைப்பற்றி எதுவும் கூறவில்லை என்பதும் 'உதயணன்கதை' பலரறிந்த பெயராயிருந்தும் அதைத் தேர்ந்தெடுக்கவில்லை என்பதும் 'பெருங் கதை' யை ஏன் தேர்ந்தெடுத்தார் என்பதும், காப்பியத்திற்குக் கொங்குவேள் இட்டபெயர் 'உதயணன் கதை' என்பதும் இக்கட்டுரையில் கூறப்பட்டன.

சான்றெண் விளக்கம்

1. சிலப்பதிகார உரைப்பாயிரம் — இரண்டாம் பத்தி

2. முதற்பதிப்பு முகவுரை 19—2—1924 - இல் எழுதப்பட்டது. இரண்டாம் பதிப்பு முகவுரை 24—12—1935 இல் எழுதப் பட்டது. முதற்பதிப்பினும் இரண்டாம் பதிப்பு விரிவும் தெளிவும் பெற்றுள்ளது, பின் 1953 - இல் வெளிவந்த மூன்றும் பதிப்பிலும் 1967 - இல் வெளியான நான்காம் பதிப்பிலும் இரண்டாம் பதிப்பிற்கு உ. வே. சா. எழுதிய முகவுரை அப்படியே இடம் பெற்றுள்ளது.

3. உ. வே. சா. பத்துப்பாட்டுச் சுவடிகளைத் தேடியபோது, இரண்டு பெருங்கதைச் சுவடிகளும் முறையே திருநெல்வேலி, திருநெல்வேலியைச் சார்ந்த வண்ணாரப்பேட்டை ஆகிய இடங்களில் முன்பின்னாகக் கிடைத்தன. முதற் சுவடியில் மறைந்து போயிருந்த சில பகுதிகளை இரண்டாம் சுவடியில் இல்லாமையால் முதற் சுவடியைப் பார்த்தே இரண்டாவது எழுதப்பட்டது என்றும், முதற்சுவடியில் சிதைந்த பகுதிகளில சில இரண்டாவதில் எழுதப்பட்டிருந்தமையால் முதற்சுவடி அதிகமாய்ப் பழுது படுவதற்கு முன்னரே அதைப்பார்த்து இரண்டாவது எழுதப்பட்டது என்றும் உ. வே, சா. கருதுவர். முதற் சுவடியைப் பார்த்துத்தான் இரண்டாவது எழுதப்பட்டிருக்கவேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

4. ஒருவர் தம்மைக் குறிப்பால் இகழ்ந்துரைத்துக் கொண்ட பழைய செய்யுள் :...

> திருத்தக்க மாமுனிசிந்தாமணி கம்பர்
> விருத்தக் கவித்திறமும் வேண்டேம் — உருத்தக்க
> கொங்குவேள் மாக்கதையும் கூறேம் குறளனுகேம்
> எங்கெழிலென் ஞாயிறெமக்கு.

சீவக சிந்தாமணியின் 'நூலாசிரியர் வரலாறு' எனும் பகுதியில் உ. வே. சா. இவ்வெண்பாவைக் காட்டுவர்.

5. இரண்டாம் பதிப்பிற்கெழுதிய முகவுரையில் இரண்டு இடங்களில் கூறுவார்.

6. உரைப்பாயிரப்பிற்பகுதி, 4. 27—34, 4. 72—6, 5. 1—6, 8. 8—13. 9. 1—4. 9. 15—212, 9. 15—215. எண்களில் முதல் எண் சிலப்பதிகாரக் காதையையும் பிறபாடல் வரிகளையும் குறிப்பன.

7.

சிலம்பு		பெருங்கதை
உரைப்பாயிரப்பிற்பகுதி	—	4. 3. 51—5
4, 27—34	—	1. 43. 145—6
9, 15—212	—	1. 52—16

பெருங்கதை எண்களில் முதல் எண் காண்டத்தையும் இரண்டாவது காதையையும் இறுதிய வரிகளையும் சுட்டுவன.

8. இலக்கணக் கொத்துப்பாயிரம் 7-ஆம் நூற்பா உரையிலும் சான்றெண் விளக்கத்தில் இடம் பெற்றுள்ள தனிப்பாடலி லும் காணலாம்.

9, "பன்னாட் கழிந்த பின்னர் முன்னாள்
எண்மெய்ப் பாட்டினுள் இரக்க மெய்ந்நிறீஇ
ஒண்வினை யோவியர் கண்ணிய விருத்தியுள்
தலையத னும்பர்த் தான் குறிக்கொண்ட
பாவை நோக்கத் தாரணங் கெய்தி"
(பெருங்கதை 1· 35—44—8)

10. உ. வே. சா. தம் இரண்டாம் பதிப்பு முகவுரையில், பேரா சிரியர் தம் தொல்காப்பிய உரையில் 'உதயணன் கதை' என்று நூற்பெயரைக் குறித்ததாகக் காட்டுவர். அவர் பார்த்த பேராசிரியர் உரைப்பதிப்பு எதுவெனத் தெரிய வில்லை, கழகப் பதிப்பு (1959) பேராசிரியர் உரையைப் பார்த்தால் 'கொங்குவேளிரால் செய்யப்பட்ட தொடர்நிலைச் செய்யுளும் போல்வன' என்றே காணப்படுகின்றது. நூற் பெயர்க்குறிப்பு இல்லை.

11, இரண்டாம் பதிப்பின் முகவுரை, உ. வே. சா. 1935-இல் பெருங்கதை மூலத்தை மட்டும் தனியே பதிப்பித்த போது அதற்கு எழுதிய முகவுரை இரண்டிலும் குறிப்பிடுவர்.

12, கலைக்களஞ்சியம் தொகுதி 7 — வித்துவான் கி. சி. வன்மீக நாதன்.

13. இலக்கிய வரலாறு—இரண்டாம் பாகம்—பக்கம் 295, நான் காம் பதிப்பு 1953.

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நெடுநல்வாடை

திரு. K. சோமசுந்தரம், பி. ஏ., பி. எல்., தஞ்சை.

வாடைக்கு அடிப்படையான பொருள், நிறைநிலையில் விளங்கும் இறைமைக் கருத்து வடிவாக உலகில் மறைந்துள்ளதை யுணர்ந்த நக்கீரர், அதன் உண்மை வடிவைக் கண்டு வியந்து, இயற்கைப் பொருள்கள் யாவும் அம்மறை பொருளின் விளக்க மெனக் கொண்டு அவ்வுண்மைச் சிறப்புப் பொருளுக்கு இயற்கை யழகினைப் பொருந்துமாறு வகையுறுத்தி அமைத்ததை நோக்குழி நக்கீரர் தம் மெய்ப்போக்கும் நோக்கும் எல்லாம் வல்ல கடவுட்டன்மைக்கு முதன்மை தந்து அதனை விளங்கச் செய்தலென்பது அறியப்பட்ட மெய்மையாகும். இவ்வாடைப்பாட்டின் வழி நக்கீரர் இயற்கையை கற்றறிய வைத்தார்; உலகியலைக் கண்டறிய வைத்தார்; கற்றதையும் கண்டதையும் சிந்திக்க வழிவகுத்தார்.

தலைவனைப் பிரிந்த தலைவி கூதிர் காலத்தில் துயர் மிகவுறுதல் இயல்பு. இவ்வியல்பினை விளக்கவந்த ஆசிரியர் நக்கீரர் தலைவியின் காதற் பிரிவுத்துயரின் மேல் தலைவனது வீரம் என்ற ஆண்மையின் விழுப்பத்தைச் சிறப்பாக விளக்கும் தலையாய கருத்தைக்கொண்டு, பொதுப்பட காதலர்ப் பிரிந்தோரெல்லாம், பிரிவாற்றாமையெனும் உணர்ச்சி மேலீட்டால் புலம்பக்காலம் கூதிராக மன இயற்கைக்கு இயைந்து நின்றதை

> காதலர்ப் பிரிந்தோர் புலம்பப்பெயல்களைந்து
> கூதிர் நின்றன்றாற் போதே' (71-72)

எனக் கூறியுள்ளார். வாடை நலிவுறும்படி விளங்கச் செய்வது, கடமையில் தப்பாத அரசனது பாசறைத் தொழிலைக் குறிக்க வந்த நக்கீரர், கூதிர்காலத்துக் குளிரில் நிகழும் நிகழ்ச்சிகளையும், சுற்றுச் சூழல் நிலைகளையுங் கொண்டே தலைவியின் துயரை மிகைப்படுத்தும் காரண வகையினையும் விளக்கித், தலைவி குறைவற கருப்பொருள்களின் சூழலிலிருந்தும், குறிஞ்சியின் உரிப்பொருளைப் பெறுதநிலையினைக் குறிப்பாகப் புலப்படுத்தியுள்ளார். வேலைப்பாடமைந்த, தந்தக் கட்டிலும் (115-123) அதன் மேல் அழகுற அமைக்கப்பட்ட படுக்கைக்குரிய தலையணியும் அன்னத் தூவியும் மறையுமாறு விரித்த மென்மைமிக்க சேக்கை (124—135) யுமிருந்தும் தலைவி அதன்கண் துயிலாதிருப்பதை நமது மனக்

கண்முன் நக்கீரர் காட்டி தலைவியின் பிரிவுத்துயரை மிகுதிப் படுத்தியுள்ளார். இதனையே நோக்கமாகக் கொண்ட நக்கீரர், மற்றும் தலைவனைப் பிரிந்து வருந்தும் தலைவி, அரிய காவலையுடைய அரண்மனையின் கண்ணுள்ள பரியின் தனிமையினைத் தோற்றுவிக்கின்ற புலம்புவிடு குரலைக் கேட்டும் பெருந்துயருறுவதை

> பணைநிலை முனைஇய பல்லுளைப் புரவி
> புல்லுளைத் தெவிட்டும் புலம்புவிடுகுரலாடு (93-94)

என, மிகுதிப்படுத்திக் காட்டிய அருமை, கருதுதற்கினிய ஓரரிய குறிப்பாகும். பின்னர் காதலரைப் பிரிந்த தலைவியின் கற்போடிணைந்த பெண்மையும். தலைவியோடுடன் பிறந்து பிரியாத நாணமாதி நான்கும் காதலன்பில் திளைக்கின்ற வகையினையும் காட்டி, அவை எத்தகையதாய் உலகை வாழ்விக்க வல்ல சிறப்பியல்புகளைக் கொண்டுள்ளதென நக்கீரர் விளக்கி, காதல் மறையில் பிறரறியாவகையில் விரவிவரும் துன்பம். அன்பில் முடிவதைத் தக்க அளவில் வழங்கி, வாடைப் பாட்டினிலே, கண்ட கண்ட இடங்கள் தோறும் அன்பின் வகையெல்லாம் நவநவமாகக் காட்சியளிக்கும் படிச்செய்து அன்புமின்பும் வேறுபொருளன்றென்பதூஉம் பெற வைத்தார்.

தெய்வ வாழ்க்கைத் துறைகள் யாவையும் ஆய்ந்து பயன் பெரிதுங்கண்ட மெய்யுணர்வினராய நக்கீரர் அஃறிணை உயிர்கட்கும் உயர்திணை உயிர்கட்குமுள்ள அன்பு விளக்கத்தையும். அன்பொடியைந்த நண்பின மாண்பினையும் இவ்வாடைப்பாட்டின்கண் கூறி, அண்டபிண்ட சராசரங்கள் யாவையும் இறைபோல் கட்டியாள்வது அன்பென்றும், அறிவு விளக்கத்தையொட்டி நிகழும் அன்பியல் நிலையின் முதிர்ச்சியெய்துவது இறைப்பேறெய்துவதாகுமென்று முணர்த்தி, வாரம்பட்டுழித் தீயவை நல்லவையாந் தன்மையும், துன்பங் கண்டவிடத்தும் இன்பங்கண்டவிடத்தும், அன்பு வெளிப்படுமியல்பை பொருட்பொதிவோடு உணர்ச்சிவாயிலின் வலிவழியால் தக்க அளவோடும் மிக்க வளனோடும் கையாண்டது அறியற்பாலது.

நக்கீரரது கவிப்பெருக்கினுக்கு, வாடை நல்ல ஊற்றிடமாக அமைந்த விந்தை வியத்தற்குரியது. நக்கீரர், தமது வாடையின் அனுபவத்தை பகுத்துணர வல்ல கற்றோரனைவரையும் உணருமாறு விளங்க வைத்து வாடைதரும் துன்பவுணர்வு மூலம் அறிவின் பயனை அடையச் செய்துவிடுகிறார். உள்ளம் நலிந்து கெடாதவாறு துன்பவுணர்வை வெளிப்படுத்தி, அதனை விரும்பத்

தகும் வகையில் உள்ளத்திற்கு ஆறுதல் அளிப்பது கலையென உணர்ந்த நக்கீரர் வாடைத் துன்பத்தை, வாழ்க்கையையொட்டி அமையும் இன்பக் கலையாக வடித்து நெஞ்சத்தை பயன்படுத்து மாறு நெடுநல் வாடைப்பாட்டினை இசைத்துள்ளார். துன்பத்தை இன்பமாக மாற்றும் வல்லமை உள்ளத்திற்கு இரக்கம், அச்சம், ஆதரவு தரும் அன்பு அருள் என்ற தூய உணர்வுகள் வழி உண்டாகவே, உள்ளமும், அவ்வுணர்வுகளோடு ஒத்து என்றும் இரண்டறக் கலந்து இயைந்து நிற்க நெடுமையாகிய அமைதி யுணர்வு நிலையினை உள்ளம் பெறுகிறது அமைதியுணர்வினைப் பெற்ற வழி, இன்ப நிறைவு உள்ளத்திற்குத் தானாக அமைதலி யல்பு. எனவே, உள்ளத்தில் படிந்தும் பதுங்கியுமுள்ள துன்பத் தை வாடை வீசி விரட்டுவதால், உள்ளத்தில் துன்பச் சுவடு யாதுமில்லாது போகவே, வாடை, உள்ளத்தைத் திறந்த வெளி யாக ஆக்கிப் பின் அதனை இறைவனது விளைநிலமாகப் பண் படுத்திவிடுகிறது. இதனையே கருத்தாகக் கொண்ட நக்கீரர், துன்பவுணர்வு வகைகளைப் புகட்டும் வாடை, கலைவடிவினையுறும் போது இன்ப ஆக்கத்தைத் தரும் மன ஒருமைப்பாட்டை பயன் பட வளாக்கும் வாய்ப்பினையுடையதென்பதைச் சுட்டி விளக்குவா ராயினர். இப்பாட்டினிலே, இன்ப அன்பெனும் உயிர் நடமாடு தலினால், வாடை, தன்புன்மையும் கொடுமையும் நீங்க, அவ்வின்ப அன்பினில் படிந்து, சார்ந்ததன் வண்ணமாதலாகிய இயல் பினைப் பெற்று, மண்ணகத்தே வாழுமுயர்களின் அன்போடி யைந்த வாழ்வோடு கலந்துவிடுகிறது. இன்ப அன்பு நோக்கு இரும்பையும் பொன்னாக்கவல்லதென்பது ஒரு தலை. இதனான் வாழ்வுக்கு ஏற்ற முறையில் வாடையினைப் பயன்படுத்திக் கொண் டால், அது நல்வாடையாக மாறுகிறது. மற்றும் வாடை தரும் உணர்ச்சி, வாழ்வொடு நெருங்கிய தொடர்பு கொண்டு, வளரும் பான்மையும் நெடுமையியல்புமுடையதாதலின், நல்வாடை நெடு நல்வாடையாகவும் அமைந்து விடுகிறது.

இன்பம் விழையாமலும் துன்பம் உழமலும் இருவினையொப்பு டைமை கொண்டு வாழும் ஆற்றலுடைய மெய்யுணர்வாளர்களுக் கும், சிறந்த ஒழுக்கத்தில் மேம்பட்டு வழுவாது வாழ்பவருக்கும், வாடை, நெடுநல்வாடையாகத்திகழுமென்னும் விழுத்தகை உண்மை இப்பாட்டின் முடிபொருட்பிழிவாய் காணப்படும். மக்கட் பிறவியின் உயர்வுக்குக் காரணமாய பகுத்தறிவின் உண் மையியல்பை நக்கீரர் இப்பாட்டினிலே குறிப்பாகப் புலப்படுத்தி யுள்ளார். வாடைத் துன்பம் தலைவன் தலைவியரது உள்ளத்தைத் தாக்கவில்லை. வாடைத் துன்பத்தில் களிறும் பரியும் அரசனை

விட்டகலவில்லை. பாசறையின்கண், அன்பியலொடு அரசன் விழுப்புண்பட்டார்பால் கருணை பொழிந்து உதவத்திரிதரும் உள்ளத்தின் அழகுக்காட்சியை வாடை அளிக்கிறது. மெல்லணை மேல் வீற்றிருக்கும் மெல்லியல்பு வாய்ந்த தலைவி தன் தலைவனது கடமையினையுணர்ந்து அவரது பிரிவால் ஆற்றுது அடங்கிய மன ஒருமையொடு நிறைநல காதலமைதியினை நாடும் நிலையினை வாடை உணர்த்துகிறது. துன்பத்தையும் துயரையும் தந்து அலையும் மனக்கவலையினையும் அகற்றும் திறனுடைய கலையுணர்வை நல்குவது இவ்வாடைப் பாட்டாதலின், 'நெடுநல்வாடை', எக்காலும் உயிர்ப்பு மேவி வாழ்க்கையைப் பயனுறுத்தும் முறையில் திகழும் சொல்லோவியமென்க. எனவே இவ்வாடைப்பாட்டு பன்முறை வேட்கையுடன் கற்றுணர்ந்து பயிலப் பயன் தரும் அறிவியியல் சிறப்புகொண்டது: நவில்தொறும் இலக்கிய இன்பத்தை விளைவித்து அறிவியலால் உணர்த்த இயலாத உண்மை உணர்வையும் ஊக்கத்தையும், ஊட்ட வல்லதொரு ஒலி நய அமைப்பினையுடையது; இனிமை பயக்கும் இயல்பினை ஒழுக்கத்தின் கண்ணதாக்கி, தொடர்ந்தொழுகும் நெறியில் சுருங்காத மனவலியினை அளிக்கவல்லது. தண்ணென்ற பண்போடு நல்லொழுக்கத்தை உரனுடன் கடைப்பிடித்து உயர்வெய்துதலையே நக்கீரர் இப்பாட்டின்கண் விரும்பி வைக்கும் உயர் கருத்தென ஓர்க.

வடந்தையின் நெடுமைப்பொருளை உணர்த்தவந்த ஆசிரியர் நக்கீரர், நேர்ந்து நிரவி ஒழுகும் நடத்தையை முன்னிறுத்தி, அன்பினுல் இணைந்தமைந் தொழுகும் நேர்மையினையும், பாடறிந்து ஒட்டவொழுகும் நேர்மைப் பண்பினையும் விளககியுள்ளார். மற்றும் அன்பின்வழி அறன் ஆக்கமுறலும், பண்பின் வழி பயன் ஆக்கமுறலும் வகையினையும் விதந்தோதியுள்ளார். அன்பார்ந்த அறப் பண்பின் தெளிவில் முகிழ்க்கும் பயன், வாழ்வின் பேறென்பதையும் உன்னவைத்தார். நேர்மையும் நெடுமையுங் கொண்டு. வாழ்க்கை வளமுற இயங்க வேண்டுமென்ற நோக்கத்துடன் நக்கீரர், வாழ்தலென்பது அன்பகத்திருத்தலென்பதை மிக்க பொருண்மை தோன்ற வாடைப்பாட்டின்கண் புலப்படுத்தி, அன்பின் திறங்களுக்கு முன், வாடையின் கொடுமையினை கெடும் படி மயங்கவைத்தார். செயல்கள் யாவும. அன்பு நெறி வழி நிகழின், உலகில் இகலற்றுப் போகுமென்பதை அன்பின் அகற்சி கொண்டு உயிர்களெல்லாம் ஒனருகி அன்பின் பிழம்பாய்த் திகழ, பாசறைத் தொழிலின் நுட்பத்தை இப்பாட்டினிலே ஒளிரும்படிச் செய்துள்ளார். பண்டு பாரதப் போர்க்களத்தே மாயோன் உலக

ஒழுகலாறுகளை உணர்த்தியது போன்று, போருக்கிடையில் நிகழும் பாசறைத் தொழில் வழி நக்கீரர் அறிவோடியைந்த அன்பின் ஆற்றலையும், இனவுணர்ச்சியையும் கடந்த அரிய அன்பின் திறத்தினையும் எடுத்தோதி பாட்டினெழிலை எழச் செய்தார். வாடைத் துன்பத்தினைப் பொறுத்து நிற்கும் ஈர அன்பின் விறலை, பாசறையின் கண்ணே, பாண்டியன் பால் அன்பு பூண்டு அவன் பின்னேகும் காதல் நலமுடைய பிடியின் மூலமும் பரிமாவின் மூலமும், நக்கீரர் விளங்க வைத்து, அன்பைத் துரத்தும் வல்லமை வாடைத் துன்பத்திற்கில்லையென்பதை உணர்வெழிலோடு உணர வைத்தார்.

மெய்யறிவு மெய்யின்பத்தன்பின் தழைவினை விரும்பும் மேலவராய கீரர், இப்பாட்டினில் வழங்கும் அன்புக் காட்சிகளோ பல உள. புதரில் முசுண்டையும் பீரமுமாகிய கொடிகள் ஒன்றையொன்று அன்பால் பற்றி தழைத்து நிற்பதையும், செடிகள் தளிர்விடும் கொடிகளுக்கு கொழு கொம்பாக அமைந்து அன்பால் சேர்ந்து நிற்கும் நிலையினையும், காமத்துகள்களிலாது பேரன்புபூத்துத் தானே வாழும் இயல்புடைய மர வகைகளின் மாட்சிமையினையும் விளக்கி நக்கீரர் மக்களின் வாழ்வியலை உயிர்ப்பியல்புமிக்க இயற்கையோடு ஒன்று படுத்தும் உண்மை வளர்ச்சிக்கு வகை செய்துள்ளார். மற்றும் மன்னன் மக்களிடத்துச் செலுத்தும் தியாகத்திற்குரிய அன்பினையும், மன்னனது விலங்கிடத்து அன்பினையும், விலங்கும் மன்னனனிடத்துச் செலுத்தும் அன்பினையும், இன வேறுபாடுடைய விலங்கும் பறவையும் (கவரிமாவும் அன்னமும்) உகளித் தொழுகும் அன்பினையும் நக்கீர காட்டி, உயிர்கள் யாவும் காதல் நிலை கடந்த உயிர்வலி காட்டும் அன்பு ஆர்வத்தாலும், அன்பு கனியும் நண்பாலும் ஆனந்த அருளாலும் ஒன்றையொன்று பிணித்தல் வகையினையும் ஒழுகு நட்பின் நீட்சியினையும் வாடைப்பாட்டினில் பதியவைத்துள்ளார்.

இவ்வாறு இணைந்தமைந்து இனிதாகும் அன்பின் நேர்மைப் பண்பின் மாண்பினில், இனிமை, அமைதி அழகுச்செம்மை முதலியன கனிந்தொழுகுதலை, வாடைப் பாவினில் கண்டு கொண்ட, உரையாசிரியராய நச்சினார்க்கினியர், அன்பொழுக்கத்தினை வாழ்விடை கடைப்பிடித்து மேன்மையெய்தலின் அழகினையுணர்ந்தும், ஒழுகலென்னும் மொழி பால் பெரிதும் ஈர்ப்புண்டு அதனின் இனிய இயல்பை நினைவு கூர்ந்தும், அரசியின் கட்டிலைப்பற்றிக் கூறும் 'குடத்த இடை திரண்டு' எனும்பகுதிக்கு குடத்திற்கும் கட்டிலிற்கும் நடுவாகிய இடம் ஒழுக மெல்லியதாய்த் திரண்டு எனக் கீரர் உள்ளக்கருத்திற்கொப்ப பாங்குடன் உரை

பசர்ந்து ஒழுக்கத்திளைப் பற்றி விழிப்புறுத்தியது இன்பம் பயப்ப தாகயுளது. ஈண்டு குடத்திற்கும் கட்டிலுக்கும் இடையே யமைந்துள்ள இடம் கவர்ச்சிமிகு கடைச்சலோடு இணைந்தமைந்த கட்டழகு இனிமையாய் வாய்ந்திருக்குமியல்பை 'ஒழுக' என்ப தினுன் கனிவுடன் உணர்த்தி, நச்சினர்க்கினியர் ஒழுக்கத்தின் விழுப்பத்தை, நயப்பாடு தோன்ற தெருட்டியிருத்தல் மிகவும் போற்றி மகிழற்பாலது. மற்றும் ஒழுகியலை வேலைப்பாட்டினிலே நுழைத்த திறன்மிகு நயமுடைத்து.

நல்வாடைப் பாட்டினில் நக்கீரர் நானிலத்தியல்புகளை உளத் திலெழும் உணர்ச்சிகளுக்கு இடமாக்கி அகவுணர்வால் புறப் பொருள் மாறுபடுவதும், புறப்பொருட்டன்மையால் அக வுணர்வு வேறுபடுவதையும். பருவ வேறு பாட்டிற்கியைய வெளிப்பொருள்களின் பயன்மாறித் தோன்றுதலையும் காட்டியது கருதத்தக்க நுட்பம் வாய்ந்துளதாகும். குறிஞ்சி, முல்லை, நெய் தல், மருதம் என்ற நால்வகை நிலத்திற்கும் திணைக்குமுள்ள தொடர்பினைக் கவினுறக் கிளந்து, நக்கீரர் உயிர்களனைத்தும் இறையுணர்வில் இணைந்த தன்மையோடு இலங்கும் வகையினைக் கருதி, வாடையில் தொடர்பு பற்றிய இயற்கையை அவர்கள் உளப்பான்மையோடு ஒன்ற வைத்து இயற்கையை இருப்பது மாறும் இருக்க வேண்டியது மாறும் இசைத்து, அதற்குச் சார் பாகயுள்ள இடம், பொழுது, செய்தியுடன் இணைத்து, வாடைக் குளிர்ச்சியினை மக்களின் மனவுணர்ச்சிக் கேறும்படியும் வகை செய்து, உயிரறிவைப் பெருக்கி இறையருளை உணர வைத்தார். மற்றும் வாடை இளையவர், முதியவர், வறியர், செல்வர் முதலி யோரையும் வலியாரையும் எளியாரையும், காதலனைப் பிரிந்தமகளி ரையும் சிறுமை பெருமை பாராது வருந்திப்புலம்பப் பெருந்துயர் செய்வதில் விளங்கும் பல்வேறுணர்வுகளை நக்கீரர் ஒழுங்கு படுத்தி நுவலும் ஒப்பனை பற்றிய உரைகள் ஆய்ந்து பயில் தற்கும் ஆழ்ந்து தெளிதற்கும் உரியவை. வாடைகுளிரில் மிளி ரும் இயற்கை வனப்புகள் இவரது நாவன்மையால் உண்மை யுரைகளாயினமை ஈண்டு நன்கு வியக்கத்தக்கது.

புலவர் நக்கீரர் முதற்கண் அகனுணர்விற்றெளிவு உண் டாகும்படி பலவகையாய புறப்பொருளியற்கையின் சிறப்பியல் களையும் அவை தம்மிற் பொருந்தி மறைந்து காணப்படும் உணர்வு கவரும் தன்மைகளையும் உள்ளவாறு விதந்து விரி வாகவும் விளக்கமாகவும் உணர்ச்சி பெருகக் கிளந்து உரைத் துள்ளார். அறிவு உணர்வு முதலாய உள்ளியல்புகளை கிளரச் செய்து எண்ண வளர்ச்சி விளக்கங் கொள்ளுமாறு சிறுமலையின் குடுமியையும் அதன் சாரலையும், பின் அதனினும் தாழ்ந்த புறவமைதி நிறைந்த கவினுறு காவினையும் நெடுநீர் நிறைந்த

கயத்தையும், பசுமை அமைதியுடைய நெடுநல்வயல்களையும், ஆறுகளையும் பொழில்களையும் எழில் நலத்தோடு கீரர் காட்டியுள்ளார். பருப் பொருள்களில் பற்றிய உள்ளம் பின்னர் இன்புற்று மெள்ள மெள்ள விரிந்து சிந்தையைத் தெளிவிக்க, படிப்படியாக மல்லல் மூதூரில் உயர்ந்து தோன்றும் மாளிகையும் சூளிகையும் செறிந்த அரண்மனையும் அதன் கண்ணுள்ள உறையுள். காணுதற்கினிய அழகு திகழும் கட்டிலில் தனிமையெனும் உயர்நிலையோடு இன்பந்தருவனவற்றை விலக்கி உறையும் கற்புடைத் தலைவியின் நிலையினைப் பாராட்டி, அவளது ஒருமைப்படும் மனத்தின் நுட்பங்கள் யாவையும் பொருட்சுவைபடக் காட்டியுள்ளார், அதன் பின்னர் பாசறைக்கண் அருளறம் பூண்டு விழுப்புண் பட்டார்க்குக் கனிந்து தொண்டாற்றுதலுமான சால்பினையும் பிறவியின் விழுப்பயனையும் நக்கீரர் சுட்டியுள்ளார். பின்பு, அரசரது பிறர்க்கென வாழும் பெரும் ஆண்மையின் வீரவாழ்வினையும், பொறையும் கற்பு பிணைந்த அரசியின் காதலறவாழ்வினையும் ஒன்று சேர்க்கும் முயற்சியில், ஆற்றல் கொண்ட கொற்றவை வழிபாட்டினை அமைத்து, அகம் புறத்தோடு ஒன்ற ஒருமை ஓங்கும் வழியை வகுத்துள்ளார். மற்றும் கற்றவரைச் சலிப்புருவண்ணம் உடலை வருத்தும் குளிரும் ஊதையுங் கொண்ட வாடையின் வலியை எளிதாக்கி. வாடையின்கண் உணர்வு கவரும் நல்லியல்புகளை வெளிப்படத் தோன்றச் செய்து உயிரின்ப வெள்ளத்தில் மூங்கி மூழ்கும்படிச் செய்து விடுகிறார். உளஉணர்ச்சிக்கேற்ப, புறத்தே காணும் வனப்பினை பொருத்தமுற அமைத்து. இயற்கையிலுள்ள சிறு மலையினைக் காட்டி தலைவன் பால் நிலவிய அமைதியில் விளங்கும் அருட்குணக் குன்றின் மாண்பினை பாசறைக்கண் விளக்கிய நக்கீரரது போக்கினையும், அச்சமூட்டும் வாடையில் அமைதி நிலவும் நாணொடு மிடைந்த கற்பினழகும் அன்பு சீலமும் பொருந்திய தலைவியின் ஏற்றத்தை அரண்மனையின்கண் குறிப்பறிவால் உணர்த்திய அவரது நோக்கினையும் சிந்திக்கின், நெடுநல்வாடை, முருகியல் சுவையோடு புலன்கட்கு விருந்தாக அமைந்து. கேட்டார் மறித்து நோக்கிப் பயன் கொள்ளும் வகையில் வாழ்வை நலனும் பயனுமுடைய தாக்கி விளக்கஞ் செய்விக்கவல்ல தென்பது, இங்கு நினைவு கூர்ந்து இன்புறுதற்குரியது

கூதிர்க்காலத்தின் இயல்பை இயற்கை வழாது, பெரிய இயற்கைப் பொருள்களின் மாண்புதானே விளங்குமாறு சிறிபாதைச் சிதைவுறுது சிறப்பித்து. கூர்த்த அறிவிற் சீர்த்தகல்விபராகிய நக்கீரர் எடுத்தியம்புவது வியக்கற்பாலது. முகில்களால் வானம் இருளடர்ந்துவிட, மழைத்தாரைகள் இடைவிடாது நிலத்தில் வீழ, எங்கும் வெள்ளம் பரவியது. வாடைக்காற்று

குன்றும் குளிரால் குன்றும்படி வீசியது. அதனுன் மரத்திலே தங்கும் பறவைகள் நடுங்கி நிலமிசை வீழ்ந்தன. குரங்குகள் நடுநடுங்கி ஒடுங்கின. விலங்குகள் மேயல் மறந்தன. கறவைக கன்று கோள் ஒழிந்தது. பெருமழை விட்டு விட்டுப் பெய்த லான் இரைதேடும் நாரைகளும் கொககுத் திரளும் ஓடுமீன் ஓட உண்டுகளிக்கத்தகும் உருமீன் வருமளவும் வாடியிருந்தன. சிறிய கொடிகளாகப் படரும் முசுண்டையும் பீரமும் முறைபே வெள்ளிய பூக்களும் பொன்னிறப் பூக்களுங் கொண்டு கொழு கொம்பு வேண்டித் தவிக்கும் நிலையிலிருந்தன. நெற்கதிர்கள் முற்றி வளைந்து சோபை இழந்தன. கமுகுகள் துன்புறுவது போன்று வயிறு வாய்த்து நின்றன. நிலவுலகில் தோன்றுவன யாவும் குளிரின் மிகுதியால் துன்பமுற்றன. ஏறுடையின நிரை ஓட்டி புலம் பெயர் கோவலர், கலக்கமுற, குளிரால் உடல்நடுங் கவும் கவுள் புடைபுடைக்கவும், துன்பத்தின் வாய்ப்பட்டு வருந்து கின்றனர். நகரத்துச் செல்வ மாந்தர்கள் சந்தனச் சாந்தி னைத் துறந்து, வெம்மையினை யூட்டுதற்குக் கத்தூரிக்கலவையை நாடி, குளிரால் நடுங்குகின்றனர். மகளிரும் நறுமலர் மாலை களில் விழைவு மிகவுடையரேனும், அவைகளை மிகுதியாக அணியாது, நீராடியதால் ஈரம் புலராத தம் முகிலனையகரிய கூந்தலில், சிறுமலர் பெய்துகொண்டு, அகிலொடு வெள்ளயிர் புகையினை நாடி, நடுக்கமுற்றனர். மனையுறை சேவல் பெடை யொடு இரை தேடாது, கடுத்தகால் ஆறும்படி மாறி மாறி செயலற்றிருந்தன. 'கல்' ஒலத்தோடு துவலைத் தூவ, வாடை வீசும் காரணத்தால் ஆலவட்டம் தன் வேலையினை யிழந்து மூலை முடுக்கினில் கண்ணிற்படாதவாறு சிலந்தியின் நூலாற் சூழப்பட்டு முளைக்கோலிலே தொங்கியது. இராப்பகல் தெரி யாமல் மயர்வுறும் மாலைப் பொழுதில், தாம் பூத்தட்டிலேயிட்டு வைத்த பிச்சியரும்புகள் மலருவதனுலேயே அது அந்திப் பொழுதென்றறிந்த நல்லியல் மகளிர், நெல்லையும் மலரையும் தூவி விளக்கேற்றி இல்லுறை தெய்வத்தை ஒளிவடிவில் வழி பட்டனர். குளிரால் இடர்மிக யெய்தும் இளையோரும் முதி யோரும் வாடைக்காற்று வீட்டினுள்ளே நுழையாதவாறு கதவு களைத் தாழிட்டுக்கொண்டு கன்னல் தண்ணீர் பருகாது, கனப் புச் சட்டியிலிட்ட நெருப்பின் வெம்மையினை விரும்பக் கூதிர் காலம் நிலைபெற்றிருந்தது. பழுத்த அறிவோடும் ஆழ்ந்தகன்ற முழுத் தமிழ் புலமையோடும், கீரர் கூதிர்காலத்தின் இயல்பின் அழகினைத் துன்பியல் இயற்கைத் தன்மையோடு தொடர்பு படுத்தி, சீர், தளை, அடிமூலம் முறையே உணர்ச்சி ததும்பவும் உள்ளம் கனிவுறவும், அறிவு தெளிவுறவும் திகழவைத்து இயற்கை மாட்சியின் ஆட்சியினை அகப்புற நலத்தோடு இனிதே விளங்க வைந்தார்.

(தொடரும்)

கரந்தைத் தமிழ்ச் சங்க விழாக்கள்

இளங்கோவடிகள் தமிழ்க் கழகம்

கரந்தைப் புலவர் கல்லூரி இளங்கோவடிகள் தமிழ்க் கழகத்தின் 32-ஆம் ஆண்டு நிறைவு விழா திருவள்ளுவர் ஆண்டு 2002 மாசித்திங்கள் 14-ஆம் நாள் (26—2—71) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-மணி அளவில் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பெருமன்றத்தில் கல்லூரி முதல்வர் திரு. செ. இர. செயச்சந்திரன், எம். ஏ, டி. பி. ஈ. டி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. திருச்சி தேசீயக் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் திரு. நா. இராசகோபாலன் எம். ஏ. அவர்களும் தஞ்சை அரசினர் மகளிர் கலைக்கல்லூரித் தமிழ்த் துணைப்பேராசிரியை டாக்டர் திருமதி லீலாவதி திருநாவுக்கரசு எம் ஏ, பி. எச். டி. அவர்களும் முறையே "பழந்தமிழ் இலக்கியம்" "தற்கால இலக்கியத்தில் கவிதைப் போக்கு" என்னும் தலைப்புக்களில் சிறப்புச் சொற்பொழிவாற்றினர்.

கல்லூரி மாணவி ப. இந்திராதேவி வரவேற்புரை கூறியபின் அவைத் தலைவர் அவர்கள் தம் முன்னுரையில் தமிழ் நாட்டில் தமிழுக்கு எதிர்ப்பு என்ற நிலை வருந்தத்தக்கது என்றும் அவ்விழிநிலை நீங்கத் தமிழ் மாணவர் ஆக்க வழியில் தொண்டாற்ற வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள். திரு. நா. இராசகோபாலன் அவர்கள் கோவூர் கிழார் போன்ற சங்ககாலப் புலவர்கள் சமுதாயத் தலைவர்களாய் நாட்டு மக்கள் துயரத்தைப் போக்குவதில் வல்லவர்களாய், நாடாளும் வேந்தர் தவறு செய்யும் போதும் அஞ்சாது தவற்றினை எடுத்துரைக்கும் பண்புடையவர்களாய் விளங்கினர் என்பதைப் புறநானூறு போன்ற பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து மேற்கோள் காட்டிப் பேசினார்கள். கல்வி சமயம், அரசியல் ஆகிய மூன்று துறையையும் சார்ந்து வளரும் போதே ஒரு மொழி உண்மையான வாழ்வும் வளர்ச்சியும் பெறும் என்ற கருத்தையும் விளக்கினார்கள். திருமதி. லீலாவதி திருநாவுக்கரசு அவர்கள் பழந்தமிழ் இலக்கிய மரபு கெடாது புதுமைக் கவிதைகள் பல இக்காலத்தில் படைக்கப்பட்டுள்ளன என்பதைச் சில கவிதைகளை எடுத்துக்காட்டி விளக்கிப் பேசினார்கள். இறுதியில் கழகச் செயலாளர் செ. நடராசன் நன்றி கூற சங்க வாழ்த்து நாட்டு வாழ்த்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளி
30-ஆம் யாண்டு நிறைவு விழாவும்
மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழாவும்.

கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்வி நிலையங்களுள் ஒன்றாய உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளியின் ஆண்டு விழாவும், மாணவர் இலக்கிய மன்ற ஆண்டு விழாவும் 27—3—71-ஆம் நாள் சனிக்கிழமை மாலை 5—00 மணியளவில் சங்கத் தமிழ்ப் பெருமன்றத்தில், தஞ்சாவூர் மண்டலக் கூட்டுறவுக் கூட்டுப் பதிவாளர் திருவாளர். ப. இராமகிருட்டினலால், பி. காம். அவர்களின் சீரிய தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைமையாசிரியர் திரு. நா. பாலசுப்பிரமணியம், பி.ஏ., எல் டி., அவர்களின் வரவேற்புரைக்குப்பின், மன்றச் செயலர் அறிக்கை படிக்க விழா தொடங்கப் பெற்றது தலைவர் தம் தலைமையுரையில். " இன்று சங்கம் என்று சொன்னால் கற்றறிந்தார் நினைவுக்கு வருவன இரண்டே இரண்டு. அவற்றுள் ஒன்று கரந்தைத் தமிழ்ச் சங்கம்; மற்றொன்று மதுரைத் தமிழ்ச் சங்கம். இத்தகைய சிறப்புடைய இச்சங்கத்தின் உயர்நிலைப்பள்ளியில் எங்கும் தமிழ் மணம் வீசுவதைக் கண்டேன். செந்தமிழோடு சைவ நெறியும் தழைத்தோங்கச் செய்ய வேண்டும். நமது சைவமதம் ஒப்புயர்வற்ற பெருமையுடையது. அதன் உயர்வை — பக்தி நெறியைப் பள்ளிக்கூட மாணவரிடையே பரப்புவதற்கு இந்தப் பள்ளிக்கூடம் வழிகாட்டியாக விளங்க வேண்டும் என்று கூறி முடித்தார்கள்

சிறப்புச் சொற்பொழிவாற்றிய, திருச்சிராப்பள்ளி. தேசியக் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் — திருவாளர். சோ. சத்திய சீலன், எம். ஏ. அவர்கள் ' கவிஞர் கண்ட காட்சி ' என்ற தலைப்பில் பேசியதாவது; " மாணவர்கள் படிப்பதற்காகச் செலவிடுகின்ற நேரத்தைக் காட்டிலும், தன் உருவத்தைக கண்ணாடியில் பார்ப்பதற்காகச் செலவிடுகின்ற நேரம் அதிகமாயுள்ளது. கண்ணாடியைப் பார்த்துத் தன் ஆடையையும் முடியையும் சரிசெய்து கொள்கின்ற மனிதன், தன் உள்ளத்தைக் சரிசெய்து கொள்வதில்லை உள்ளத்தைப் பண்படுத்துகின்ற கண்ணாடியே இலக்கியம் என்பதாகும். தமிழர்கள், கல்விச் சிறப்புடைய ஒரு தகுதியால் மட்டும் ஒருவரை அறிஞர் என்றோ — சான்றோர் என்றோ கூறுவதில்லை. கல்விச் சிறப்போடு பண்பாடு உடையவர்களையே அறிஞர் என்று போற்றினர். மாணவர்கள் நிலையில்லா உலகத்தில் அழியாது நிற்பதாகிய புகழைப் பெற பாடுபட வேண்டும் " என்று கூறினார்.

மன்றச் சார்பில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியடைந்தார்க்கு விழாத் தலைவர் பரிசுகள் வழங்கியபின், தமிழாசிரியர் திரு மீ. இராமதாசு அவர்கள் நன்றி நவில, நாட்டு வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

வாழ்க்கைத் திறனாய்வு.

புலவர். தி. நா. அறிவு ஒளி, திருக்கழுக்குன்றம்.

வாழ்க்கையின் இயல்பையும் குறை-நிறைகளையும், வாழ்வின் எதிர்கால வளர்ச்சி பற்றியும் ஆராய்வது வாழ்க்கைத் திறனாய்வாம். இக்காலத் தமிழின வாழ்க்கை பற்றிய திறனாய்வு முழுமையாக, முறையாகச் செய்யப்படவில்லை. இலக்கியம், கலைகளைப் பற்றித் திறனாய்வு செய்யப் பெறுவது போன்றே வாழ்க்கைத் திறனாய்வு தனிமிக இன்றியமையாததே.

திருக்குறள், நாலடியார் போலும் சீரிய அற நூல்களிலும் தொல்காப்பியப் பொருளதிகாரத்திலும், புறநானூறு - பதிற்றுப் பத்து முதலியவற்றுள் சில பாக்களிலும் வாழ்க்கைத் திறனாய்வு அமைந்துள்ளது. ஆதலின் வாழ்க்கையின் வேர் தொட்டு முடி வரை முறையான திறனாய்வு இன - மரபு - வரலாற்றைத் தழுவி இனியே உருவாக வேண்டும்.

'இலக்கியம் வாழ்வின் திறனாய்வே' என்பர். வாழ்வின் திறனாய்வோடு வாழ்வின் எதிர்காலத் திட்டமும் கலந்ததே இலக்கியமாதலின், அதனை ஓரோவழி ஏற்பதே அமையும்.

தனியார் வாழ்க்கைத் திறனாய்வும், இனத்தின் வாழ்க்கைத் திறனாய்வும் இரு வேறு கூறுகள் ஆகும்.

பிசிராந்தையார் தமக்கு நரை - திரை - மூப்பு வராமைக்குக் காரணம் கூறியபோது பாடிய 'யாண்டு பலவாக' எனத் தொடங்கும் பாடல் தனியார் வாழ்வுத் திறனாய்வுக் கருத்தினது. அவ்வையார் அதியமானஞ்சி இறந்த காலை உணர்வுருகிப் பாடிய 'சிறியகட் பெறினே எமக்கீயுமன்னே!' என்ற புறப்பாடலும், பிறவும் தனியார் வாழ்க்கைத் திறனாய்வுப் பாக்களே.

களங்காய்க் கண்ணி நார்முடிச்சேரல் என்ற சேரவேந்தனைப் பதிற்றுப் பத்துள் - நான்காவது பாடலில் - காப்பியாற்றூர்க் காப்பியனார் பாராட்டும்போது, அவனது வாழ்க்கையைத் திறனாய்ந்து விளக்குகிறார்.

"நார் முடிச் சேரல் பகைவர்க்குத் துன்பஞ் செய்பவன்; நண்பர்க்கு நிரம்ப நல்ல அணிகலங்களை நல்கி இன்பம் அருள்பவன் நற்பண்புகள் நிறைந்து, பணிதற்குரிய உயர்ந்தோரிடம் பணிந்து, ஐம்புலனும் அடங்கியவன்; குற்றமற்ற தலைவன்; வாய்

மையே கூறும் சான்றோர் அவன் புகழைப்போற்றுவர். அத்தகைய சேரலின் பெருஞ்செழுமையும், அவன் இன்ப வாழ்வும் நிலை பெறுக! வான்தோயும் நல்ல புகழை உலகம் உள்ளவரையும் இருக்குமாறு தாழ்ந்து கிடந்த குடியினரை உயருமாறு உதவிய வன் அவன் வெற்றி பெறுவதற்குக் காரணமாகச் சுற்றத்தைக் காத்தோம்பியவன்; பகைவர் அரணை யழித்தவன்; பகைவரை விடாது கைப்பற்றியவன்; பழமையான நிலைத்த சிறப்புடைய அவன் ஆட்சியின் கீழ் வாழும் நன் மக்களுக்கு இணையாக அப் பகைவரின் உள்ளத்திலிருந்த கொடுமை முழுதும் இல்லாது ஒழியும் வண்ணம் செம்மையாகத் திருத்திய அறக் கொள்கை யாளன். அச்சேரவேந்தன் நல்ல ஆற்றல் பொருந்திய வேந்தே! நீ பெரிதும் நன்மையை உடையவனாய் இருக்கின்றாய். ஆதலால், இவ்வுலகத்தில் வாழ்கின்றவரின் ஆக்கத்தின் பொருட்டு நின் வளமும் வாழ்வும் நிலைபெற்று வாழ்க!'' எனப் பாடியுள்ளார் :

''வாழ்க நின் வளனே நின்னுடை வாழ்க்கை
வாய்மொழி வாயர் நின்புகழ் ஏத்தப்
பகைவர் ஆரப் பழங்கண் அருளி
நகைவர் ஆர நன்கலஞ் சிதறி
ஆன்றவிந் தடங்கிய செயிர்தீர் செம்மால்!
வான்றோய் நல்லிசை உலகமொடு உயிர்ப்பத்
துளங்குகுடி திருத்திய வலம்படு வென்றியும்
மாயிரும் புடையன் மாக்கழல் புனைந்து
மன்னெயில் எறிந்து மறவர்த் தரீஇத்
தொன்னிலைச் சிறப்பின் நின்னிழல் வாழ்நர்க்குக்
கோடு அற வைத்த கோடாக் கொள்கையும்
நன்று பெரிது உடையையால் நீயே
வெந்திறல் வேந்தே இவ்வுலகத் தோர்க்கே!''

[பதிற்றுப் பத்து : 4 : 7 - வலம்படுவென்றி]

இப்பாட்டோவியம் நார்முடிச் சேரலின் வாழ்வியல்பைத் திறனாய்ந்திடும் அழகிய விளக்கமாக அமைந்துள்ள தன்றோ? ஆம்! தனி மாந்தனாக ஒருவனைக் கண்டு, அவன் வாழ்க்கைத் திறனாய்வின் தெளிவாக இஃது அமைந்துள்ளது.

பண்டை மன்னரினத்தின் இயல்பைப் பற்றிய 'பொதுத் திறனாய்வு' பதிற்றுப் பத்து மூன்றும் பத்தில் காணப்படுகிறது. இதனைப் பாடியவர் ஆசிரியர் பாலைக் கௌதமனாராவார். பல் யானைச் செல்கெழுகுட்டுவனைப் பாராட்டும் இரண்டாம் பாடலில் அவன் முன்னோராகிய சேரவேந்தர் இயல்பும் வாழ்வொழுக்கமும் திறனாய்ந்து தெளிவிக்கப் பெற்றுள்ளது.

அளவு கடந்த சீற்றமும், தகாத மிகைக் காமமும், எல்லை மீறிய இரக்கமும், பகைவர்க்கு மிக அஞ்சுதலும், மெய் கூறுது பொய் கூறுதலும், நெருங்கிப் பழகுபவர்களிடம் அளவு மீறி அன்பு கொண்டிருத்தலும், மிகக் கொடிய தண்டனை செய்தலும், இவை போன்ற பிறவும் இவ்வுலகில் அறத்தையறிந்து நடத்தும் அரசு முறைக்குக் கேடு தரும் தீமைகளாகும் இத்தகு குறைகள் தன் நாட்டில் இல்லாமல் நீக்கி, அறமும் நன்மையும் மிகுதியாகச் செய்து தன்னுட்டு மக்கள். தமக்குள்ளேயே பகை விளைத்து முரண்பட்டுத் துன்பம் விளைவித்துக் கொள்ளாதபடி காத்துப் பிறர்க்குரிய பொருளை விரும்பாமலும், குற்றமற்ற அறிவுடையோராய்ச் செம்மையான நெறியில் நீங்காமல் ஒழுகித் தம்மிடம் அன்பு செய்து இல்லறம் நடத்தும் வாழ்க்கைத் துணைவியைப் பிரியாமல் உடனுறைந்து, பலர்க்கும் பகுத்தளித்துத் தாமும் உண்டு இனிமையாக வாழ, வறிதே முதுமையடைந்த உடம்பும் நோயும் இல்லாதவராய்ச் சிறந்து பொலிய, கடலும் காடும் தம்பால் உண்டாகும பொருட்களை உதவ, அரசியலை முறைப்படி நடத்தி ஆண்ட பேரரசர் இனத்தின் வழித்தோன்றலான பல் யானைச் செல் கெழு குட்டுவனே! - எனப் பாடியுள்ளார். இப்பகுதி பண்டை மன்னரினத்தின் வாழ்வுண்மையை முழுதும் நமக்குத் தெளிவாக்குகிறதன்றே ?

"சினனே காமம் கழிகண் ணேட்டம்
அச்சம் பொய்ச்சொல் அன்புமிக வுடைமை
தெறல் கடுமையோடு பிறவும் இவ்வுலகத்து
அறந்தெரி திகிரிக்கு வழியடை யாகுந்
தீதுசேண் இகந்து நன்றுமிகப் புரிந்து
கடலுங் கானமும் பலபயம் உதவப்
பிறர்பிறர் நலியாது வேற்றுப் பொருள்வெஃகாது
மையில் அறிவினர் செவ்விதின் நடந்துதம்
அமர்துணைப் பிரியாது பாத்துண்டு மாக்கள்
மூத்த யாக்கையொடு பிணியின்றி கழிய
ஊழி உய்த்த உரவோர் உம்பல்

[பதிற்றுப் பத்து : 3 ; 2 - 1 - 11]

காதல் வாழ்வின் திறனும், இல்லற வாழ்வின் திறனும் களவியல் - கற்பியல் இலக்கணத்திலும் இலக்கியத்திலும் காண முடிகிறது.

இக்கால வாழ்வில் பண்டை வாழ்வு போல் வரையறையும், முறையும் இல்லாமையால் முன்னை போல முறைப்படத்தொகுத்து நிரல்பட வகுத்து வாழ்விலக்கணம் காணல் அரிய செயலே.

இக்காலத் தமிழ்மன்பதை குல-இனப் பிரிவுகளோடு அமையாது, செல்வம், கல்வி, செல்வாக்கு, அதிகாரம், தகுதி, தொழில், கட்சி, பிறமொழியறிவு, அறியாமை, சமயம், கொள்கை, அரசியல் என்றின்ன பிறவால் பல்கோடிப் பிளவுகள் உடையதாய் உள்ளது. இப்பிளவுகளைச் சந்து செய்வித்து இணைக்கும் ஒரு பேராற்றல் இதுவரை முழு வலிமையோடு செயற்படவில்லை. இவ்வவல நிலையை எண்ணுகையில் அறிவு நெஞ்சங்கள் நாணி நையவே வேண்டும்.

அறியாமையும் மடமையும் சான்ற குடும்பங்களும் மக்களும் பல்கியுள்ள நம் நாட்டில் 'படித்த மடவர்' 'படித்த கயவர்' குழுக்களும் மல்கி மிகுந்திருக்கும் பேரிழிவு நிலை நினைத்தற்குரியதாம்.

நம் நாட்டு வாழ்வியலில் ஒரு பொதுமையொருமையை உருவாக்க வேண்டும். அத்தகு முயற்சி அறிஞராலும் சான்றோராலும் உணர்ச்சியாளராலும் குடும்பத் தலைவர்களாலும் உருவாக்கி நிலைபெறச் செய்வது நனி இன்றியமையாததாம்.

செல்வமும், தன்னலமும் தன் குடும்பமும் தான் பலர் எண்ணமெலாம் நிறைந்த உணர்வலைகளாம். உழைப்பும், உயிர்வாழ்வும் குறுகிய அணுவளவு எல்லையினைக் கடவாத நிலையினரே மிகப் பல்லோர்! இவர்களிடை உடன்பாடுகளை விட 'எதிர்மறை'களே மிகுதி. பிறரை மதியாமை, கீழ்ப் படியாமை, செருக்குடைமை ஆகியவையே பலர் நெஞ்சையாளும் உணர்வுப் போக்குகளாயுள்ளன.

வாழ்வைச் சுவைக்கும் ஆர்வம் இடைக்காலத்தைவிடத் தற்காலத்தில் சிறந்திருக்கிறது. ஆயின், இந்நோக்கம் முறைகேடான வழியில் பாய்கிறதென்பதே இங்குக் கருதத்தக்கது. இளம்பருவத்தினரை முறையான நெறியில் ஆற்றுப் படுத்தும் எவ்வகை முயற்சியும் தமிழ மன்பதையில் மேற்கொள்ளப் பெறவில்லை.

தெளிந்த கொள்கைகள் புரிந்துகொள்ளப்பட்ட கருத்துகள் இன்று பலரிடம் இல்லை. சொற்போராட்டம் கீழ்வெட்டுப்பேச்சு, எள்ளுதல், தாக்குதல் ஆகியவை கருத்தறிவை நிலைநாட்டுபவையாக நம்புகின்றனர். இவ்விழிநிலை மாறவேண்டும்; மாற்ற வேண்டும்.

கலைகள் இழிநிலையை நாடி இறங்கும் நிலையிலிருந்து காத்துப்பண்பாட்டுக் கலைகளாக அவை மலரக் 'கலை நறுமலர்ச்சி' அமையவேண்டும். இக்கலைப் புரட்சி உருவாகாவிட்டால், கலையின் பெயரால் கயமை ஆட்சி புரியும். அதனால் அறத்தின் ஆட்சி வீழ்ச்சியுறும்.

தனியார் வாழ்க்கையில் இருவேறு தனி நிலைகள் உள. செல்வச் செழுமை கமழும் குடிகள் செருக்கோடு திரிதரும் நிலை

யும், வறுமையும் வாட்டமும் நோயும் தோல்வியும் ஏற்று உழலும் அளிய நிலையும் கலந்த வாழ்வுக் கலம்பகமே தமிழகமாகும்.

தனி மாந்தன் தன் நெஞ்சளவிலும் இரட்டை இயல்புடைய வனாக உள்ளான். தனக்கொரு தன்மையும், பிறர் முன் வேற்றுப் போக்கும் கொண்டு பிறரையும் ஏமாற்றித் தன்னையும் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றான்,

உலகின் உயரிய அறிவியல், ஆய்வுப் புதுமை, வாழ்வினிமை ஆகியவை கனவில் கூடக் கண்டறியார் தமிழரிற் பெரும்பான்மை யர் உள்ளனர். இவர்கள் முயற்சியெல்லாம் 'வயிற்றுத் தீ'த் தணிப்பதும், உடற்பசியைத் தணிப்பதுமாகவே முடிகிறது.

வாழ்க்கைச் சிக்கல்கள் என்ற சிறையினின்றும் வெளியேற முடியாத நோய்டிமைகளாக அல்லல் உறுபவரே இற்றைத் தமிழர் என்பதில் ஐயமில்லை. பொதுவாழ்வுணர்வுக் குறையாலும் அறிவியல் உணர்வுக் குறையாலும், பண்பாட்டறிவுக் குறையா லும் வாழ்வாங்கு வாழ அறியாது வறுமையும் சிறுமையும் நோய் மையும் பிணித்து வருத்த வாடும் அவல ஓவியமாக வாழ்பவரே தமிழர்!

கட்சிகளும் செயற்றுறைகளும் திட்டங்களுங் கூட ஏதோ ஒரு வகை விளம்பரப் பணிகள் ஆற்றுவதைத் தவிர மெய்ப் பணி புரிதல் இல்லை. நாளை ஓட்டி வாழ்க்கை கடத்துவோர் மிகுந்த நாடாகத் தமிழகம் சோர்ந்துவிட்டது.

நல்லுணர்வுகள் நோய்ப்பட்டும், நொடித்தும் நலிவது இக் காலப் 'புரட்சி' என முழங்கப்படும் 'நையாண்டிக் கூத்தைக்' கண்டு நல்லோர் நடுநடுங்குகின்றனர். சான்றோர் செல்வாக்கு பெறாத வாறு வாழ்வு நோயாகியுள்ளது. சான்றோரை ஈன்று, போற்றி அவர் வழி ஒழுகாத நாடு சிறப்பதில்லை தமிழ்ச் சான்றோர் மூலை யில் முடங்கிக் கிடப்போராக உள்ளனர். மக்கள் அன்னாரைப் பற்றி அணுவும் அறியாது கிடக்கின்றனர்.

குடும்ப வாழ்வு குழம்பிய குட்டையாக உள்ளது. அன்றாடங் காய்ச்சிகளிடை அன்பின் ஐந்திணைக் காதலையோ, ஆறிய கற்பை யோ காண முயலலாமா? ஆயின், இதனிடையே நடுநிலைக் குடும்பங்கள் பழம்பண்புகளைக் காக்கும் முயற்சியில் ஊடாடி வருவதையும் நாம் காண்கிறோம். அறிவும் உணர்வும் தெளி வுற்று வளமையோடு ஓங்கி வாழும் முயற்சியில் வருங்காலத் தமிழினம் திட்டமிட்டு முயலவேண்டும்.

தன் வாழ்க்கையையும் பிறர் வாழ்க்கையையும், தன்னாட்டு வாழ்வையும் பிற நாட்டு வாழ்வையும் ஆராய்ந்து தெளியும் ஆய் வறிஞர் மிக வேண்டும். இத்திறனாய்வு புதுத்தமிழ் மன்பமை உருவாக உதவும்.